بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْد
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 11

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

இதழ் 12

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1447 - ரமலான் 29
ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - அமான் 19 ★ 19 மார்ச் 2026

## அல்லாஹ்வின் கட்டளை

وَاِذَا سَاَلَكَ عِبَادِيْ عَنِّيْ فَاِنِّيْ قَرِيْبٌ ۭ اُجِيْبُ دَعْوَةَ الدَّاعِ اِذَا دَعَانِ ۙ فَلْيَسْتَجِيْبُوْا لِيْ وَلْيُؤْمِنُوْا بِيْ لَعَلَّهُمْ يَرْشُدُوْنَ ○

(தூதரே) என்னடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றிக் கேட்டால், நான் அருகில் இருக்கின்றேன்; பிரார்த்தனை செய்கிறவர் என்னை அழைக்கின்றபோது, நான் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள்கிறேன். எனவே அவர்களும் என் கட்டளையினை ஏற்றுக் கொண்டு என்னிடம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள் (என்று பதில் அளிப்பீராக) (2:187)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

நபிமொழி

## கருணையும் பாவமன்னிப்பும் மற்றும் நரகத்திலிருந்து விடுதலையும் பெறுவதற்கான வழிமுறை ரமலான் ஆகும்

ஹஸ்ரத் ஸல்மான் ஃபார்ஸி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஷஃபான் மாதத்தின் கடைசி நாளில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எங்களுக்கு உரை நிகழ்த்தியபோது, இவ்வாறு கூறினார்கள்: ‘மக்களே! ஒரு மகத்தான மாதம் உங்கள் மீது நிழலிடப் போகிறது. அது மிகவும் அருளுக்குரிய மாதமாகும். அதில் ஓர் இரவு உள்ளது, அது ஆயிரம் மாதங்களை விடச் சிறந்ததாகும். அந்த மாதத்தின் நோன்பை அல்லாஹ் கடமையாக்கியுள்ளான், மேலும் அந்த மாதத்தின் இரவுகளில் இறைவணக்கத்தில் ஈடுபடுவதை உபரியான (நஃபில்) இறை வணக்கமாக்கியுள்ளான்.

எனவே யார் இந்த மாதத்தில் நஃபில்களுடன் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற விரும்புகிறாரோ, அவர் ரமலானில் மட்டுமின்றி மற்ற மாதங்களிலும் கடமையை நிறைவேற்றியவரைப் போன்றவர் ஆவார். மேலும், யார் இந்த மாதத்தில் கடமையை நிறைவேற்றுகிறாரோ, அவர் மற்ற நாட்களில் 70 கடமைகளை நிறைவேற்றியவரைப் போன்றவர் ஆவார். இது பொறுமையின் மாதமாகும். பொறுமையின் பிரதிபலன் சொர்க்கமாகும். இது ஒருவருக்கொருவர் உதவி செய்யும் மாதமாகும். இந்த மாதத்தில் நம்பிக்கையாளரின் வாழ்வாதாரம் அதிகரிக்கப்படுகிறது. யார் ஒரு நோன்பாளிக்கு நோன்பு திறக்க உணவு அளிக்கிறாரோ, அது அவருடைய பாவங்களுக்கு மன்னிப்பாகவும், நரக நெருப்பிலிருந்து விடுதலையாகவும் அமையும். மேலும் அவருக்கு அந்த நோன்பாளியின் கூலியில் எவ்விதக் குறைவுமின்றி சமமான கூலி வழங்கப்படும்.‘ * * * * * * * * * * *

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள்

## ஒரு நம்பிக்கையாளர் தமது இருப்பால் தம்மை இறைவழியில் அர்ப்பணித்தவராக நிரூபணம் செய்ய வேண்டும்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் நாடியிருந்தால் மற்ற சமுதாயங்களைப் போன்று இந்த சமுதாயத்திற்கும் எந்தக் கட்டுப்பாடுகளையும் விதித்திருக்க மாட்டான். ஆனால் அவன் நாம் நன்மைகளைப் பெறும் பொருட்டு கட்டுப்பாடுகளை விதித்துள்ளான். என்னைப் பொறுத்தவரை, ஒரு மனிதன் உண்மையுடனும், சிறப்பான மனத்தூய்மையுடனும், ‘இறைவா! நீ என்னை இந்த மாதத்தில் உனது அருளிலிருந்து இழப்பிற்குரியவராக ஆக்காதே! என்று இறைவனிடம் வேண்டினால் பிறகு இறைவன் அவரை இழப்பிற்குரியவராக ஆக்குவதில்லை. அதுபோன்ற நிலையில் மனிதன் ரமலான் மாதத்தில் நோய்வாய்ப்பட்டு விட்டாலும், அந்த நோய் அவருக்கு அருளாகவே அமையும். ஏனெனில் ஒவ்வொரு செயலும் எண்ணத்தைப் பொறுத்தே அமைகின்றது. ஒரு நம்பிக்கையாளர் தமது இருப்பால் தம்மை இறைவழியில் அர்ப்பணித்தவராக நிரூபணம் செய்ய வேண்டும். எந்த நபர் நோன்பிலிருந்து இழப்பிற்குரியவராக இருப்பாரோ அவரது உள்ளத்தில், அந்தோ! ‘நான் ஆரோக்கியமாக இருந்திருந்தால் நிச்சயமாக நோன்பு நோற்றிருப்பேனே! என்று உண்மையான ஏக்கம் இருக்குமானால், அந்நிலையில் வானவர்கள் அவருக்காக நோன்பு நோற்பார்கள். நிபந்தனை என்னவென்றால், அவர் போலியான காரணங்களை தேடுபவராக இருக்கக் கூடாது. அவ்வாறிருந்தால் பின்னர் வல்ல இறைவன் அவரை ஒருபோதும் நற்கூலியிலிருந்து அவரை இழப்பிற்குரியவராக ஆக்க மாட்டான். இது ஒரு நுணுக்கமான விஷயமாகும். ஒரு நபருக்கு (தனது சோம்பலினால்) நோன்பு கடினமாக இருக்குமென்றால், மேலும், அவர் ‘நான் நோயாளி ஆவேன்; மேலும் எனது உடல் நிலை எப்படி உள்ளது என்றால் ஒருவேளை நான் உணவு உண்ணவில்லை என்றால் இன்ன இன்ன நோய்கள் வந்து விடும் ; இப்படி ஆகிவிடும்; அப்படி ஆகிவிடும் என்று எண்ணுகின்றார் என்றால், பின்னர் அத்தகைய நபர் இறைவனின் அருட்கொடையை சுயமே தமக்கு கடினமானதாக கருதுகின்றார். அவ்வாறிருக்க, அவர் எப்படி நற்கூலிக்கு தகுதியானவராக திகழ்வார்! ஆயினும், ரமலான் வந்து விட்டது என்று எந்த நபரின் உள்ளம் மகிழ்ச்சியடைகின்றதோ, மேலும், ரமலான் வந்தால் நான் நோன்பு நோற்பேன் என்று காத்திருந்து பிறகு நோயின் காரணமாக ஒருவரால் நோன்பு நோற்க முடியாமல் போய் விட்டால், பின்னர் அத்தகைய நபர் வானத்தில் நோன்பிலிருந்து இழப்பிற்குரியவராக இருக்க மாட்டார்.
(தஃப்ஸீர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள், பாகம் 1, பக்கம் 262, காதியான் பதிப்பு, 2004-ம் ஆண்டு)

* * * * * * * * * * *

தஃப்ஸீரே கபீரிலிருந்து

## அருளுக்குரிய ரமலான் மாதத்தில் திருக்குர்ஆனை முழுமையாக ஓதி முடிப்பதன் சிறப்பு

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் சூரா அல் பக்கராவின் வசனம் 186-ன் விளக்கவுரையில் கூறுகின்றார்கள்:

இதன் மூன்றாவது பொருள் என்னவென்றால், ரமலான் மாதத்தில் திருக்குர்ஆன் முழுமையாக அருளப்பட்டது என்பதாகும். ஹதீஸ்களில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடமிருந்து ஓர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது இறுதி நோயின் போது ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: ஒவ்வொரு ஆண்டும் ஜிப்ரீல் (அலை) அவர்கள் என்னுடன் முழு திருக்குர்ஆனையும் ஒரு முறை ஓதி வந்தார்கள். ஆனால் இந்த ஆண்டு அவர் என்னுடன் இரண்டு முறை ஓதியுள்ளார். இதிலிருந்து எனது மரண காலம் நெருங்கிவிட்டது என்று நான் கருதுகிறேன்.‘

ரமலான் அல்லாத மற்ற மாதங்களிலும் திருக்குர்ஆன் இறங்கியுள்ளது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை, ஆனால் ரமலான் மாதத்தின் சிறப்பு என்னவென்றால், அதில் திருக்குர்ஆன் எவ்வளவு அருளப்பட்டிருந்ததோ, அவற்றை ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களுடன் இணைந்து ஓதி வந்தார்கள். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், முழு திருக்குர்ஆனும் மீண்டும் ஒருமுறை நபி (ஸல்) அவர்களுக்கு இறக்கப்படுவது போல அது அமையும். ஸஹீஹ் புகாரியின் பதஉல் வஹீ என்ற அத்தியாயத்திலும் இதே கருத்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மனிதர்களிலேயே பெரும் கொடையாளியாக இருந்தார்கள். ஜிப்ரீல் (அலை) அவர்கள் ரமலான்

இதன் தொடர்ச்சி 10-ம் பக்கம்.....

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

لَآ اِلٰہَ اِلَّا اللّٰہُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰہِ

## பாரதத்தின் அஹ்மதிகளுக்கு உருது மொழியின் முக்கியத்துவம்

உருது மொழி அதன் தொடக்கத்தில் பதிமூன்றாம் நூற்றாண்டில் இருந்தபோதிலும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளின் கலாச்சார, பண்பாட்டு மற்றும் மொழியியல் கலவையால் 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தன் மொழிப்புலமையின் சிறப்பால் முழுமை பெற்று விட்டிருந்தது. இந்தியாவின் பெரும்பாலான பகுதிகள் மற்றும் மதங்களைச் சார்ந்த மக்கள் இதனைப் புரிந்துகொள்ளும் நிலையை எட்டியபோது, அல்லாஹ் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களை இந்த மொழியின் மூலமாகவே இஸ்லாமியப் பிரச்சாரத்திற்காகவும், சமுதாயங்களின் தர்பிய்யத்திற்காகவும் நியமித்தான்.

எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பெரும்பாலான உரைகளும், நூல்களும் உருது மொழியிலேயே இருப்பதை நாம் காண்கிறோம். அன்னார் (அலை) அரபி மற்றும் பாரசீக மொழிகளிலும் நூல்களை எழுதியுள்ளார்கள். மேலும் அன்னாரது கவிதைத் தொகுப்புகள் அரபி மற்றும் பாரசீக மொழிகளிலும் உள்ளன. அதேபோன்று அன்னாருக்கு வந்த இல்ஹாம்கள் உருது மொழியில் மட்டுமின்றி பெரும்பாலும் அரபியிலும் பின்னர் பாரசீகத்திலும் இன்னும் கூறப்போனால் ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளிலும் உள்ளன. ஆயினும், அன்னாரது பெரும்பாலான அறிவுரைகள் உருது மொழியிலேயே அமைந்துள்ளன.

உருதுவின் எழுத்து நடை பாரசீக மற்றும் அரபி எழுத்து வடிவத்தை ஒத்திருக்கிறது, இந்தியின் எழுத்து நடைமுறை வடிவம் சமஸ்கிருதத்திற்கு ஒத்ததாக உள்ளது. ஆனால், தற்போதைய காலகட்டத்தின் பேச்சுவழக்கில் இந்தி பேசுபவர்களும் உருது மொழியை நன்கு புரிந்துகொள்ள முடியும். தற்போதோ இந்தியாவில் உருது மற்றும் இந்தியின் எழுத்து வடிவங்கள் நிச்சயமாக வெவ்வேறாக இருக்கின்றன. ஆனால், பேச்சு வழக்கில் எந்தளவிற்கு ஒன்றுபட்டிருக்கின்றன என்றால், இவை இரண்டையும் ஒன்றிலிருந்து மற்றொன்றை பிரிக்க முடியாத அளவில் இருக்கின்றன.

உருதுவில் உள்ள மற்றொரு சிறப்பு என்னவென்றால், அது அரபி மற்றும் பாரசீக மொழிகளுக்கு நெருக்கமாக இருப்பதன் காரணத்தால், அதனை அறியக் கூடியவர்கள் பழைய அரபி மற்றும் பாரசீக வார்த்தைகளை மிக எளிதாகத் தன்னுள் ஈர்த்துக் கொள்ள முடியும். இன்னும் கூறப்போனால், அதில் புலமை பெற முடியும். மேலும் அவ்வாறே நிகழ்ந்துள்ளது. கடந்த மூன்று நூற்றாண்டுகளில் இந்தியாவில் வெளியான உருதுப் புத்தகங்களைப் பார்த்தால், அந்த நூல்கள் இஸ்லாமியர்களுக்கு இஸ்லாமியக் கருத்துக்களை கொண்டு சேர்ப்பதில் முக்கியப் பங்காற்றியுள்ளன என்பது தெளிவாகிறது.

இது குறித்து ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) ஒரு முக்கியமான கருத்தைக் கூறியுள்ளார்கள். அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அகில உலகையும் சீர்திருத்துவதற்காக அனுப்பப்பட்டார்கள், எனவே

وَاٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ

என்ற சூரா அல்-ஜுமுஆ'வின் வசனத்தின்படி அன்னாரின் தோற்றம் இருமுறை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. முதல் தோற்றத்தில், நேர்வழி முழுமை பெற்றது. ஆனால், நேர்வழி முழுமையடைந்த முதலாம் வருகையின்போது உலகம் முழுவதும் நேர்வழியை பரப்புவதற்கான வசதிகள் இல்லாமல் இருந்தது. எனவே நேர்வழியை பரப்புதலின் முழுமையடைதல் என்ற அன்னாருடைய அந்த இரண்டாம் வருகையில், பிரச்சாரத்திற்கான ஏற்பாடுகள் உருவான பிறகு, அன்னாருடைய முழுமையான பிரதிபலிப்பாகிய இமாம் மஹ்தி மற்றும் மஸீஹ் மவ்வூத் அவர்கள் மூலமாக அந்தப் பணி நிர்ணயிக்கப்பட்டிருந்தது. பின்னர் அதற்காக இறைவன் தேர்ந்தெடுத்த மொழி உருது மொழியாக இருந்தது. ஏனெனில் அந்த காலத்தில் உருது மொழி மற்ற மொழிகளை விடவும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் எடுத்துரைக்க இருந்த அந்த உயர்ந்த கருத்துக்களைத் தாங்கும் வல்லமையைப் பெற்றிருந்தது. மேலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் மீது இறங்க இருந்த அந்தக் கூற்றுகளை மனித உள்ளங்களில் ஈர்ப்பு சக்தியுடன் பிணைப்பதற்கான தகுதியைப் பெற்றிருந்தது.

இது குறித்து அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

وَاٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ என்ற வசனம் கூறுவதைப் போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இரண்டாம் வருகையின் அவசியம் ஏற்பட்டது. அப்போது, இரயில், தந்தி, தபால் வசதி, அச்சு இயந்திரங்கள், பரஸ்பர மொழிகளின் அறிவு போன்ற சேவைகள் உருவாயின. குறிப்பாக, இந்தியாவில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே உருது மொழி ஒரு பொதுவான மொழியாக மாறியிருந்தது. இது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சமூகத்தில் தனது நிலையால் இவ்வாறு முறையிட்டது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் அனைத்து சேவகர்களும் இதோ தயாராக இருக்கிறோம்; பிரச்சார கடமையை முழுமை செய்ய உயிராலும், உள்ளத்தாலும் தயாராக இருக்கின்றோம்; தாங்கள் வருகை தாருங்கள்; மேலும் தங்களது இந்தக் கடமையை முழுமை செய்யுங்கள்; ஏனெனில், நான் உலக மக்கள் அனைவருக்காகவும் வந்துள்ளேன் என்பது தங்களின வாதமாகும். பூமியில் வசிக்கக்க் கூடிய அந்த அனைத்து சமுதாயங்களுக்கும் தங்களால் திருக்குர்ஆனை பிரச்சாரம் செய்ய முடியும்; மேலும் பிரச்சாரத்தை உச்சம் வரை எட்ட வைக்க முடியும்; மேலும், சான்றுகளை முழுமை செய்யும் பொருட்டு அனைத்து மக்களிடமும் திருக்குர்ஆனின் உண்மைத்துவங்களை பரப்புவதற்கான தருணம் இதுவே ஆகும். அப்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள்: பாருங்கள்! நான் நிழல் வடிவில் தோன்றுவேன். ஆனால், நான் இந்திய நாட்டில் தோன்றுவேன். ஏனெனில், மார்க்க உத்வேகமும், அனைத்து மதங்களின் சங்கமமும், அனைத்து மதப்பிரிவுகளின் போட்டியும், அமைதி மற்றும் சுதந்திரமும் அந்த இடத்தில் இருக்கின்றது.

(தஹ்ஃபா கோல்டவியா, பக்கம் 164 - 165, காதியான் பதிப்பு)

மேற்குறிப்பிட்ட சான்றின் அடிப்படையில், பாரத தேசத்தின் உருது மொழி அறிந்த அஹ்மதிகளின் கடமை என்னவென்றால், அவர்கள் இந்தியாவில் தோன்றியுள்ள ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முழுமையான பிரதிநிதியின் வலிமையான உதவியாளராக ஆக வேண்டும்; மேலும் எல்லா ரீதியிலும் அவருக்கு உதவ வேண்டும்; மேலும் இஸ்லாமிய பிரச்சாரத்தின் ஆன்மிக ஜிஹாதில் எழுத்து வடிவிலும், பேச்சு வடிவிலும், பொருளாதார ரீதியிலும் பங்கு பெற வேண்டும்.

இந்திய தேசம் எப்படிப்பட்ட ஓர் இடமாக உள்ளதென்றால், இங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முழுமையான பிரதிநிதியின் மிஷன் வெற்றி பெறுவதற்கு தேவையான அனைத்து வசதி வாய்ப்புகளும் உள்ளன. இங்கு உருது மொழி ஒரு முக்கியப் பங்கை வகிக்கின்றது. ஏனெனில் இந்தியாவில் சுமார் ஒரு டஜன் மாநிலங்களில் உருது மொழி பேசப்படுகிறது. ஏனெனில், இந்தி பேசுபவர்களும் உருது மொழியைப் புரிந்துகொண்டு பேச முடியும். மேலும் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பெரும்பாலான ஆன்மீக அறிவு மற்றும் படைப்புகள் பெரும்பாலும் உருது மொழியிலேயே உள்ளன.

தற்போதைய காலத்தில், கண்ணியத்திற்குரிய அனைத்துக் கலீஃபாக்கள் மற்றும் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் அருளுக்குரிய உரைகள் மற்றும் அறிவுரைகளும் உருது மொழியிலேயே கிடைக்கின்றன. எனவே, இந்த ஆன்மீக பொக்கிஷங்களைப் புரிந்துகொள்வதற்கு நாம் உருது மொழியை கற்பது அவசியமாகும். பேச்சுவழக்கில் இந்தியும், உருதுவும் ஒத்திருப்பதால், குறிப்பாக இந்தி பேசும் மாநிலங்களில் வசிப்பவர்கள் உருது மொழியைக் கற்றுக்கொள்வது அவசியமாகும்.

* * * * * * * * * * *

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறை நேசம் குறித்த மனம் கவர் கோணத்தில் நற்குறிப்புகள்**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:
வல்ல இறைவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறுதி நேரத்தில், தேர்ந்தெடுக்கும் உரிமையை வழங்கினான். அதாவது, நீர் விரும்பினால் உலகில் வாழலாம். அல்லது விரும்பினால் என் பக்கம் வந்துவிடலாம் என்று தேர்ந்தெடுக்கும் உரிமையை வழங்கினான். அன்னார் (ஸல்) என் இறைவா! இப்பொழுது நான் உன் பக்கம் வருவதையே விரும்புகிறேன் என்று பணிவுடன் கூறினார்கள். அன்னாரது அருளுக்குரிய உயிர் பிரிந்தபோது, அன்னார் (ஸல்) கூறிய அந்தக் கடைசி சொற்றொடர் بِالرَّفِيْقِ الْاَعْلٰى என்பதாக இருந்தது.

பொருள்: இப்பொழுது நான் இந்த இடத்தில் இருக்க விரும்பவில்லை; நான் என் இறைவனிடம் செல்ல விரும்புகிறேன்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவன் மீது கொண்டிருந்த அளப்பரிய நேசம் குறித்த எண்ணற்ற நிகழ்வுகள் உள்ளன.
சொல்லப்போனால், அன்னாரது உள்ளத்தில் எந்நேரமும் இறைநேசம் எனும் ஒரு பெருங்கடல் அலைமோதிக் கொண்டிருந்தது என்ற விஷயத்தில்தான் அன்னாரது ஒவ்வொரு செயலும், ஒவ்வொரு நிகழ்வும் சென்று முடிகின்றது
ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லா நிலையிலும் இறை தியானம் செய்து வந்தார்கள்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 30 ஜனவரி 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **ஸுல்ஹ்** மாதம் **30 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவன் மீது கொண்டிருந்த அளப்பரிய நேசம் குறித்த எண்ணற்ற நிகழ்வுகள் உள்ளன. சொல்லப்போனால், அன்னாரது உள்ளத்தில் எந்நேரமும் இறைநேசம் எனும் ஒரு பெருங்கடல் அலைமோதிக் கொண்டிருந்தது என்ற விஷயத்தில்தான் அன்னாரது ஒவ்வொரு செயலும், ஒவ்வொரு நிகழ்வும் சென்று முடிகின்றது. இதன் ஒரு காட்சி நமக்கு உஹது போரில் தென்படுகிறது, அங்கே அன்னாருக்கு இறைவன் மீதிருந்த நேசத்தில், தனித்துவமான மற்றும் ஒப்பற்ற துடிப்புக் கொண்டிருந்த ஒரு பாணி இருந்தது.

அறிவிப்பில் வருகிறது, ஹஸ்ரத் பராஃ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: உஹது நாளன்று நாங்கள் இணைவைப்பவர்களை எதிர்கொண்டோம். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வில்லாளிகள் கொண்ட ஒரு படைக் குழுவை நிறக வைத்து, ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்களை அவர்களுக்குத் தலைவராக நியமித்தார்கள். மேலும், நீங்கள் உங்கள் இடத்தை விட்டு நகரக்கூடாது; நாங்கள் அவர்களை வெற்றி கண்டதாக நீங்கள் பார்த்தாலும் நகரக்கூடாது. அல்லது அவர்கள் எங்களை வென்றுவிட்டதாகப் பார்த்தாலும், அப்பொழுதும் எங்களுக்கு உதவி செய்ய வரக்கூடாது என்று மிகவும் கண்டிப்பான கட்டளையிட்டார்கள். அதாவது வெற்றி, தோல்வி ஆகிய இரண்டு சூழ்நிலைகளிலும் நீங்கள் உங்கள் இடத்தை விட்டு விலகக் கூடாது. இங்கு நிகழ்வின் உச்சக்கட்டத்தில், பெருமானார் (ஸல்) அவர்களுக்குள் இறைநேசம் குறித்து எப்படிப்பட்ட எழுச்சி இருந்தது என்பதை அறிவிப்பாளர் பின்வருமாறு விளக்குகிறார்:

எங்களுடன் போர் நடந்தபோது, எதிரிகள் ஓடிப்போய் விட்டனர். எதுவரையெனில், இணைவைப்பாளர்களான பெண்கள் அவர்களுடைய கால்களின் அணிகலன்கள் தென்படும் அளவுக்கு ஆடைகளைக் கணுக்காலுக்கு மேல் உயர்த்திப் பிடித்துக் கொண்டு, மலைகளை நோக்கி ஓடுவதை நான் பார்த்தேன். அப்போது முஸ்லிம்கள் போர்ச் செல்வம், போர்ச் செல்வம் என்று கூறத் தொடங்கி விட்டார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அவர்களைத் தடுத்தார்கள். அதாவது அவர்களுடைய அணியைத் தடுத்து, ஹஸ்ரத் நபி பெருமானார் (ஸல்) அவர்கள், நீங்கள் நகரக் கூடாது என்று எனக்கு வலியுறுத்திக் கூறியுள்ளார்கள் எனக் கூறினார்கள். ஆனால், அவர்கள் கேட்காமல், மலைக் குன்றை விட்டுவிட்டு போர்ச் செல்வத்தின் பக்கம் வந்தபோது, அல்லாஹ்வும் அந்த முஸ்லிம்களை விட்டும் முகந்திருப்பிக் கொண்டான். அதாவது, மக்கள் குன்றை விட்டுவிட்டு போர்ச் செல்வத்தை சேகரிப்பதற்காக வந்து விட்டபோது, அல்லாஹ் முஸ்லிம்களை விட்டும் முகந்திருப்பி விட்டான். போர் தலைகீழாக மாறியது; எதிரிகள் மீண்டும் தாக்குதல் நடத்தினார்கள். இவ்வாறு எழுபது முஸ்லிம்கள் ஷஹீதானார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்கள்: இதற்கிடையில், நபி பெருமானார் (ஸல்) அவர்கள் தம் தோழர்களுடன் மலையடிவாரத்தில் ஒதுங்கியிருந்தார்கள். அப்பொழுது அபூ ஸுஃப்யான் ஓர் உயர்ந்த இடத்தில் ஏறி நின்று கொண்டு, மக்களிடையே முஹம்மது இருக்கின்றாரா? **என்று கூவினார். அவருக்குப் பதில் அளிக்காதீர்கள்!** என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் அவர், இவர்களிடையே இப்னு அபீ கஹாஃபா (அதாவது, அபூபக்ர் (ரலி) அவர்கள்) இருக்கிறாரா? என்று கேட்டார். பதில் அளிக்க வேண்டாம் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். பிறகு அவர், இவர்களிடையே இப்னு கத்தாப், உமர் இருக்கிறாரா? என்று கேட்டார். எந்தப் பதிலும் வராததைக் கண்டு, இவர்கள் அனைவரும் கொல்லப்பட்டுவிட்டார்கள்; உயிரோடு இருந்திருந்தால் நிச்சயம் பதில் அளித்திருப்பார்கள் என்று அபூ ஸுஃப்யான் கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவர்கள் அல்லாஹ்வின் எதிரியே! நீ பொய் சொல்கிறாய்; உனக்கு எதிரில் உன்னை இழிவுபடுத்தக் கூடியவர்களை அல்லாஹ் உயிரோடு வைத்திருக்கிறான் என்று உரக்கக் கூறலானார்கள் (அதாவது, கூறப் பார்த்தார்கள்)

உடனே அபூ ஸுஃப்யான், ஹுபல் (சிலை) மேலோங்கட்டும்! என்று முழக்கமிட்டார். அவர் இவ்வாறு சொன்னதும் பெருமானார் (ஸல்) அவர்கள் துடித்துப் போய், நீங்கள் இதற்குப் பதில் சொல்லுங்கள் என்று கூறினார்கள். ஸஹாபா பெருமக்கள், நாங்கள் என்ன பதில் சொல்லட்டும்? என்று பணிவுடன் கேட்டார்கள். அதற்கு, ஹுஸூர் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வே அனைவரையும் விட மேலானவன்; அனைவரையும் விடப் பெரியவன் என்று சொல்லுங்கள் எனக் கூறினார்கள். மீண்டும் அபூ ஸுஃப்யான், எங்களுக்கு உஸ்ஸா (சிலை) இருக்கிறது, உங்களுக்கு எந்த உஸ்ஸா சிலையும் இல்லை என்று கூறினார். ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்கள், இதற்கு பதில் அளித்திடுங்கள் என்று கூறினார்கள். அதற்கு, என்ன பதில் சொல்ல வேண்டும்? என்று ஸஹாபா பெருமக்கள் கேட்டார்கள். அப்போது, அல்லாஹ்வே எங்களுக்கு உதவியாளன்; உங்களுக்கு எந்த உதவியாளனும் இல்லை என்று சொல்லுங்கள்! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

(ஸஹீஹ் புஹாரீ, கிதாபுல் மகாஸீ, ஹதீஸ் எண்: 4043)

அதாவது, அல்லாஹ்விற்காகத் தன்மானம் பற்றிய கேள்வி எழுந்தபோது, அவன் மீதான நேசம் பற்றி கேள்வி எழுந்தபோது, அன்னார் (ஸல்) தமது இன்னுயிரை சற்றும் பொருட்படுத்தவில்லை. உடனடியாக, இதற்கு பதில் கொடுங்கள் என்று ஸஹாபா பெருமக்களுக்குக் கட்டளையிட்டார்கள். முதலில் அன்னார் (ஸல்) ஹிக்மத்தை கருத்தில் கொண்டு பதில் அளிக்க விரும்பவில்லை.

இதனைப் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் வரலாற்றின் அடிப்படையில் கூடுதலாக எழுதியுள்ளார்கள். அவர்கள் எழுதுகிறார்கள்:

மாநபி (ஸல்) அவர்களைச் சூழ்ந்து நின்று கொண்டிருந்த ஸஹாபா பெருமக்கள், நிராகரிப்பாளர்களின் பலத்த தாக்குதலால் பின்னுக்குத் தள்ளப்பட்டிருந்தார்கள். நிராகரிப்பாளர்கள் பின்வாங்கியதுமே, அவர்கள் மீண்டும் பெருமானார் (ஸல்) அவர்களைச் சூழ்ந்து ஒன்றுதிரண்டனர். அதாவது, ஸஹாபா பெருமக்கள் ஒன்று கூடி விட்டனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பொன்னான உடலைத் தாங்கிப் பிடித்தார்கள். ஏனென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் மயங்கி கீழே விழுந்திருந்தார்கள். ஒரு ஸஹாபி ஹஸ்ரத் உபைதா பின் அல் ஜர்ராஹ் (ரலி) அவர்கள், பெருமானார் (ஸல்) அவர்களின் தலையில் பதிந்திருந்த (தலைக்கவசத்தின்) இரும்புக் கம்பியை தம்முடைய பற்களால் கடித்து பலமாக வெளியே எடுத்தார்கள்; இதனால் அவர்களுடைய இரண்டு பற்கள் உடைந்து போயின. சிறிது நேரத்திற்குப் பிறகு, பெருமானார் (ஸல்) அவர்களுக்கு நினைவு திரும்பி விட்டது. நான் கூறியது போன்று, அன்னார் (ஸல்) காயங்கள் காரணமாக மயக்கமடைந்திருந்தார்கள். அன்னாருக்கு நினைவு திரும்பியதும் ஸஹாபா பெருமக்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் உயிரோடு இருக்கிறார்கள், அனைவரும் வந்து விடுங்கள்! என்று தெரிவிப்பதற்காக மைதானத்தின் நாலாப்புறமும் ஆட்களை அனுப்பினார்கள். ஏனெனில், பெருமானார் (ஸல்) அவர்கள் ஷஹீதாகிவிட்டார்கள் என்று எதிரிகள் வதந்தி பரப்பியிருந்தனர். நவூதுபில்லாஹ்! சிதறி ஓடியிருந்த முஸ்லிம் படை மீண்டும் ஒன்றுதிரளத் துவங்கி விட்டது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அவர்களை அழைத்துக் கொண்டு மலையடிவாரத்திற்குச் சென்று விட்டார்கள். எஞ்சியிருந்த படை மலையடிவாரத்தில் நின்றுகொண்டிருந்தபோது, அபூ ஸுஃப்யான் மிக உரத்த குரலில், நாங்கள் முஹம்மதை கொன்றுவிட்டோம்! என்று கூவினார். எதிரிகள் உண்மை நிலையை அறிந்துகொண்டு மீண்டும் தாக்குதல் நடத்திவிடக்கூடாது என்பதற்காக பெருமானார் (ஸல்) அவர்கள் அபூ ஸுஃப்யானுக்கு பதில் அளிக்கவில்லை. முஸ்லிம்கள் மரணிக்கவில்லை; மாறாக, காயமுற்றிருக்கின்றார்கள் என்று எதிரிகள் நினைத்தனர். முஸ்லிம்கள் காயமடைந்த நிலையில் இருப்பதனால், அவர்களால் மீண்டும் ஒரு தாக்குதலைத் தாங்க முடியாது என்பதனாலும், காயமுற்றிருக்கும் முஸ்லிம்கள் மீண்டும் எதிரிகளின் தாக்குதலுக்கு ஆளாகிவிடுவார்கள் என்பதனாலும் அன்னார் (ஸல்) பதில் அளிக்கவில்லை. இஸ்லாமியப் படையிடமிருந்து இதற்கு எந்தப் பதிலும் வராததைக் கண்டு, தனது எண்ணம் சரியானதுதான் என்று அபூ ஸுஃப்யானுக்கு உறுதியாகி விட்டது. அவர் உரத்த குரலில், நாங்கள் அபூ பக்ரையும் கொன்றுவிட்டோம் என்று கூவினார்.

ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கும், எந்த பதிலும் அளிக்க வேண்டாம் என்று கட்டளை இட்டார்கள். பிறகு அபூ ஸுஃப்யான், நாங்கள் உமரையும் கொன்றுவிட்டோம் என்று கூவினார். அப்பொழுது மிகவும் ஆவேச மிக்கவரான ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், நாங்கள் இறையருளால் உயிரோடுதான் இருக்கிறோம்; உங்களை எதிர்க்க ஆயத்தமாகவே இருக்கிறோம் என்று பதிலளிக்க விரும்பினார்கள். ஆனால் மாநபி (ஸல்) அவர்கள், முஸ்லிம்களை இன்னலில் ஆழ்த்தி விடாதீர்; அமைதியாக இருப்பீராக! இப்போது பலவீனமான நிலை இருக்கிறது. அப்படியே தாக்குதல் தொடுத்து விட்டார்கள் என்றால், இன்னும் அதிகம் இழப்பு ஏற்படலாம் என்று கூறி தடுத்து விட்டார்கள். இப்போது, இஸ்லாத்தின் தோற்றுநரையும், அவருக்கு வலது, இடது கரங்களாக விளங்கியவர்களையும் நாம் கொன்றுவிட்டோம் என்று இணைவைப்பாளர்களுக்கு உறுதியாகி விட்டது. இதனால் அபூ ஸுஃப்யானும் அவருடைய கூட்டாளிகளும் மகிழ்ச்சியில்,

أُعلُ هُبَل، أُعلُ هُبَل

என்று முழக்கமிட்டனர். அதாவது, எங்கள் கண்ணியமிக்க சிலையான ஹுபலின் புகழ் ஓங்குக! அது இன்று இஸ்லாத்தை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டது!

தமது மரணத்தைப் பற்றிய அறிவிப்பைக் கேட்டும், அபூ பக்ர் (ரலி) அவர்களின் மரணம் குறித்த அறிவிப்பைக் கேட்டும் மற்றும் உமர் (ரலி) அவர்களின் மரணம் பற்றிய அறிவிப்பைக் கேட்டும், காயமுற்றிருக்கும் முஸ்லிம்கள் மீது மீண்டும் காஃபிர்களின் படை மீண்டும் தாக்குதல் தொடுத்து விடப்போகிறது; சிறிதளவு முஸ்லிம்கள் அவர்களுடைய கைகளால் ஷஹீத் ஆகி விடப்போகிறார்கள் என்று எண்ணி, மௌனமாக இருக்குமாறு அறிவுறுத்திய அதே அண்ணல் நபி (ஸல்) அவர்கள், இப்பொழுது அந்த ஓரிறைவனின் கண்ணியம் பற்றிய கேள்வி வந்ததும், இணைவைப்பின் முழக்கம் மைதானத்தில் ஒலிக்கப்பட்டதும், அன்னாரது ஆன்மா துடித்துப் போனது. அன்னார் (ஸல்) மிகுந்த ஆவேசத்துடன் ஸஹாபா பெருமக்களை நோக்கி, நீங்கள் ஏன் பதில் கூறாமல் இருக்கிறீர்கள்? என்று கேட்டார்கள். அதற்குத் தோழர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் என்ன பதில் அளிக்கட்டும்? என்று வினவினார்கள். அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள்,

اَللّٰهُ اَعْلٰى وَاَجَلّ اَللّٰهُ اَعْلٰى وَاَجَلّ

அதாவது, ஹுபல் சிலையின் கண்ணியம் உயர்ந்தது என்று நீங்கள் பொய் கூறுகிறீர்கள். தனித்தவனும் இணையற்றவனுமான அல்லாஹ்வே கண்ணியமிக்கவன்; அவனது மேன்மையே உயர்ந்தது; ஹுபல் அல்ல என்று சொல்லுங்கள் என்று கூறினார்கள்.

இவ்வாறு பெருமானார் (ஸல்) அவர்கள் தாம் உயிரோடு இருக்கும் செய்தியை எதிரிகளுக்குத் தெரியப்படுத்தினார்கள்.

இந்தத் துணிச்சலான மற்றும் வீரமிக்க பதில், இணைவைப்பவர்களின் படையில் எந்த அளவு மிக ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால், இந்தப் பதிலின் மூலம் இணைவைப்பவர்களின் எதிர்பார்ப்புகள் அனைத்தும் மண்ணாகிப்போன பிறகும், அவர்களுக்கு முன்னால் மிகச் சொற்பமான எண்ணிக்கையில், காயமுற்ற நிலையில், முஸ்லிம்கள் நின்றிருந்த போதிலும், உலகியல் விதிகளின்படி அவர்கள் மீது மீண்டும் தாக்குதல் தொடுத்து அவர்களை அழித்து விடுவது முற்றிலும் சாத்தியமான ஒன்றாக இருந்த போதிலும், மீண்டும் தாக்குதல் தொடுக்க அவர்களுக்குத் துணிச்சல் வரவில்லை. அவர்களுக்கு எந்த அளவு வெற்றி கிடைத்திருந்ததோ அதன் மகிழ்ச்சியை கொண்டாடியவாறே அவர்கள் மக்காவுக்குத் திரும்பிச் சென்று விட்டார்கள். (தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன். அன்வாருல் உலூம், தொகுதி 20, பக்கம் 252 - 253)

பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுடனான நேசத்தில் ஷிர்க்கின் துளி கூட பட விடமாட்டார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது, ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒருவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, அல்லாஹ்வும் தாங்களும் நாடினால் என்று கூறினார். அதைக் கேட்ட அண்ணல் நபி (ஸல்) அவர்கள், என்னை நீர் அல்லாஹ்வுக்கு நிகராக ஆக்கிவிட்டீரா? இதற்கு மாறாக, தனியே, அல்லாஹ் நாடினால், என்று சொல்வீராக! என்று கூறினார்கள்.

(ஸுனன் இப்னு மாஜா, கிதாபுல் குஃப்ஃபார், ஹதீஸ் எண்: 2117)

இணைவைப்பின் சிறு அம்சம் கூட வர விடமாட்டார்கள். மக்கள் சிலர், அல்லாஹ் நாடினால், தாங்கள் நாடினால் என்று கூறி விடுவார்கள். எனினும், எல்லாம் வல்ல அல்லாஹ் நாடினால், அல்லாஹ்வின் அருள் இருக்கிறது என்றால், பிறகு, அன்னாருடைய துஆவும் இருக்கிறது என்றால், பிறகு, பரக்கத் ஏற்படும். துஆ எனும் அளவுக்கோ சரிதான். ஆனால், தாங்கள் நாடினால் என்பது தவறாகும். ஏனெனில், பெருமானார் (ஸல்) அவர்கள் இதை வன்மையாக வெறுத்தார்கள்.

பிறகு, மக்கள் மண்ணறைகளை வணங்கும் இடமாக ஆக்கிவிடுவார்களோ என்ற கவலை ஹுஸூர் (ஸல்) அவர்களுக்கு எப்போதும் இருந்து வந்தது. ஆனால் பேரிழந்த நிலை என்னவென்றால், இன்று அதற்கு மாறாகவே நடந்து வருகிறது. முன்னரும் நான் கூறியிருந்தேன். பீர்மார்கள் மற்றும் ஃபகீர்மார்களின் மண்ணறைகளுக்குச் சென்று முஸ்லிம்கள் வணக்க வழிபாடுகளையும், ஸஜ்தாக்களையும் செய்கிறார்கள்; ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களோ மண்ணறைகளை மஸ்ஜித்களாக மாற்றுவதைத் தடுத்துள்ளார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அண்ணல்

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

நபி (ஸல்) அவர்கள் மரணத்தின் தருவாயில் இருந்த நோயின் போது, அதாவது இறுதி நேரத்தில், யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும்; அவர்கள் தங்களுடைய நபிமார்களின் அடக்கஸ்தலங்களை வணக்கஸ்தலங்களாக ஆக்கிக் கொண்டார்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியிருக்காவிட்டால், அன்னாரது கப்ர் திறந்த வெளியாக வைக்கப்பட்டிருந்திருக்கும்; ஆனால், அதை வணக்க இடமாக மாற்றிவிடுவார்களோ என்று நான் அஞ்சுகிறேன். வணக்க இடம் உருவாக்கப்பட்டு விடக் கூடாது என்பதற்காகத்தான் திறந்த வெளியாக வைக்கப்படவில்லை.

இப்பொழுதோ அரசாங்கம் அதைச் சுற்றி முறையாக ஏற்பாடு செய்து வைத்துள்ளது. எவ்விதமான இணைவைப்பும் வெளிப்பட்டு விடக்கூடாது என்பதற்காக வேலிகள் மற்றும் சுவர்கள் அமைத்துள்ளார்கள். குறைந்தபட்சம் அவர்கள் இந்த நல்ல வேலையை செய்துள்ளார்கள். ஏனெனில், அன்னார் இந்த இணைவைப்பை வன்மையாக வெறுத்தார்கள்.

இறைவனின் ஓரிறைமையைப் பற்றி எடுத்துரைப்பதில் ஓர் அறிவிப்பு இவ்வாறு வருகிறது: ஹஸ்ரத் இப்னு அபீ கஅப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: இணைவைப்பாளர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், நீங்கள் உங்கள் இறைவனின் தலைமுறையை எங்களுக்கு சொல்லுங்கள என்று கேட்டார்கள். இதனால் அல்லாஹ் இந்த வசனங்களை இறக்கினான்: قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ اَللّٰهُ الصَّمَدُ

பொருள்: அல்லாஹ் ஒருவன். அல்லாஹ் தேவையற்றவன். அவன் தனித்தவனும் ஈடு இணையற்றவனும் ஆவான். அவன் எவரையும் பெறவுமில்லை; எவராலும் பெறப்படவுமில்லை. ஏனெனில், பிறந்த எதுவாயினும் அது மரணித்தே தீரும். மேலும், மரணிக்கின்ற எதற்கும் வாரிசும் இருந்தே தீரும். கண்ணியமும் மேன்மையும் மிக்க அல்லாஹ் மரணிக்கவும் மாட்டான்; அவனுக்கு எந்த வாரிசும் இருக்காது. அவனுக்கு இணையானவரும் எவரும் இல்லை.

அறிவிப்பாளர் கூறுகிறார்கள்: அவனுக்கு ஒப்பானவர் எவரும் இல்லை; சமமானவரும் எவரும் இல்லை; அவனைப் போன்றவரும் எவரும் இல்லை. (ஸுனன் திர்மிதி, ஹதீஸ் எண்: 3364)

பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் ஓரிறைமையை எடுத்துக் கூறுவதற்கான எந்த வாய்ப்பையும் கை நழுவ விடமாட்டார்கள். அன்னாருடைய ஒவ்வொரு சொல்லில் இருந்தும் அல்லாஹ்வின் மீதான நேசம் சொட்டியது. எல்லாத் தருணத்திலும், அன்னார் (ஸல்) எப்பொழுது பேசினாலும், அல்லாஹ்வின் மீதான நேசம் அன்னாருடைய உள்ளத்தில் நிறைந்து காணப்படுகிறது என்பதே ஒவ்வொரு சொல்லில் இருந்தும் வெளிப்பட்டு வந்தது. இன்னும் சொல்வதாயின், அன்னாருடைய இதயம் இறையன்பால் நிறைந்திருக்கிறது. அதைத் தவிர அங்கு வேறொன்றும் இல்லை.

ஹஸ்ரத் ஸைது பின் ஃஹாலித் ஜுஹனீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எங்களுக்கு ஹுதைபியாவில், இரவு பொழிந்த மழைக்குப் பிறகு ஃபஜ்ர் தொழுகை தொழ வைத்தார்கள். அன்னார் (ஸல்) தொழ வைத்தபிறகு, மக்கள் பக்கம் திரும்பினார்கள். கண்ணியத்திற்குரிய மற்றும் மேலான உங்கள் இறைவன் என்ன கூறினான் என்று உங்களுக்குத் தெரியுமா? என்று வினவினார்கள். அல்லாஹ் உள்ளங்களின் நிலைமைகளை அறிகிறான். மழையைப் பார்த்து மக்கள் என்ன நினைத்தார்களோ அது அல்லாஹ்வுக்குத் தெரிந்து விட்டது. அல்லாஹ் அதைப் பெருமானார் (ஸல்) அவர்களுக்குத் தெரியப்படுத்தி விட்டான். அதற்கு , அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் நன்கறிவார்கள் என்று மக்கள் பணிவுடன் கூறினர்.

அன்னார் (ஸல்) கூறினார்கள்: என் அடியார்களில் சிலர் என் மீது ஈமான் கொண்டவர்களாக காலை பொழுதை அடைந்தார்கள்; சிலர் நிராகரிப்பாளர்களாக இருந்தார்கள் என்று அல்லாஹ் என்னிடம் கூறினான்

அதாவது, மக்களில் சிலர், அவர்களில் சிலர் இரவு பெய்த மழையைக் கண்டு நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கின்ற நிலையில் காலைப் பொழுதை அடைந்தார்கள். சிலர் நிராகரிப்பாளர்களாக இருந்தார்கள். எங்கள் மீது அல்லாஹ்வின் அருள் மற்றும் அவனுடைய கருணையால் மழை பொழிந்தது என்று எவர் கூறினாரோ அவர் என் மீது ஈமான் கொள்ளக்கூடியவர் ஆவார். நான் கூறியது போன்று, எவர்கள் அல்லாஹ்வின் அருளால் மழை பொழிந்தது என்று கூறினார்களோ அவர்கள் ஈமான் கொண்டவர்கள் ஆவார்கள். நட்சத்திரங்களை நிராகரிக்கக் கூடியவர்கள் ஆவார்கள். அந்தக் காலத்தில் நட்சத்திரங்களையும் வழிபட்டு வந்தார்கள். தர்பிய்யத் அம்சமும் குறைவாக இருந்தது. இந்த வழிபாடு செய்பவர்களாக இருந்த இணைவைப்பாளர்கள் பலர் இவ்வாறு இஸ்லாத்தில் நுழைந்தார்கள்.

எனவே, இன்ன நட்சத்திரத்தின் காரணமாக இன்று மழை பெய்தது என்று சில மக்கள் கூறி விடுவார்கள். எனவே நட்சத்திரங்களினால் இன்று மழை பொழிந்தது என்று சொன்னவர்கள் என்னை நிராகரிப்பவர்கள் ஆவார்கள். நட்சத்திரத்தின் மீது ஈமான் கொள்ளக்கூடியவர்கள் ஆவார்கள். எனவே, அல்லாஹ் அன்னாரிடம் கூறினான்: முஹம்மதே (ஸல்)!நீர் இறைவனின் ஏகத்துவத்தைப் பற்றிய முழுமையான புரிதலைக் கொண்டிருப்பது போன்று, எந்த அளவு நுணுக்கமான முறையில் நீங்கள் இறைவனின் தவ்ஹீது மற்றும் அவன் மீதான நேசத்திற்கு ஒவ்வொரு விவகாரத்திலும் சான்று பகர வேண்டும் என்று ஈமான் கொண்ட உம் மக்களிடமும் கூறுவீராக! மனதின் ஆழத்தில் இருந்து அவன் மீது அவர்கள் ஈமான் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஒரு நபர் வந்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! சொர்க்கம் மற்றும் நரகத்தைக் கட்டாயமாக்கக் கூடிய இரண்டு விஷயங்கள் எவை? என்று பணிவுடன் வினவினார். அதற்கு ஹுஸூர் (ஸல்) அவர்கள், எவர் அல்லாஹ்வுக்கு யாரையும் இணையாக்காத நிலையில் மரணித்தாரோ அவர் சொர்க்கத்தில் நுழைவார். எவர் அல்லாஹ்வுக்கு இணைவைத்த நிலையில் மரணித்தாரோ அவர் நரகத்தில் நுழைவார்; அவர் நெருப்பில் நுழைவார் என்று கூறினார்கள்.

எனவே, இன்றும் ஷிர்க் என்றால் என்ன? என்று கேட்கின்ற ஒவ்வொருவருக்கும் இதே பதில் போதுமானது.

இது குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் கூறியுள்ளார்கள்:

காரணிகள் மீது நம்பிக்கை வைத்தல், தன் மீது நம்பிக்கை வைத்தல், தனது திறமையின் மீது நம்பிக்கை வைத்தல், தனது செல்வத்தின் மீது நம்பிக்கை வைத்தல், தனது குடும்பம் மற்றும் கோத்திரத்தின் மீது நம்பிக்கை வைத்தல் மற்றும் தன்னுடைய வழித்தோன்றல்கள் மீது நம்பிக்கை வைத்தல் ஆகியவை.

சுருக்கமாக, மனிதன் இறைவனுக்கு முதன்மை அளிக்காமல் எந்த விஷயத்தில் நம்பிக்கை வைத்தாலும் சரி, அல்லாஹ்வின் பெயரை எடுக்காமல் எதில் நம்பிக்கை வைத்தாலும் சரி அவன் இணைவைப்புக்கு ஆளாகின்றான். (மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 420, 2022-ம் ஆண்டு பதிப்பு)

எனவே, இந்த அளவு நுணுக்கத்துடன் நாம் நம்மை ஆய்வு செய்து கொண்டே இருக்க வேண்டும். அதாவது, நாம் ஷிர்க்கில் இருந்து தவிர்ந்திருக்க வேண்டும். அதன்படி அமல் செய்ய வேண்டும். மேலும், அல்லாஹ்வின் மீதான நேசத்தை உள்ளத்தில் உருவாக்கிக் கொண்டே செல்ல வேண்டும்.

பிறகு, இன்னும் நுட்பமாக ஓரிடத்தில் அன்னார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்:

மஹ்மூத் பின் லபீத் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:-

எனக்கு உங்களை குறித்து, மிகச் சிறிய ஷிர்க்கைப் பற்றிதான் எல்லாவற்றையும் விட அதிகமான அச்சம் இருக்கிறது என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! மிகச் சிறிய ஷிர்க் என்றால் என்ன? என்று வினவினார்கள்.

அதற்கு, நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அது வெளிக்காட்டுதல் ஆகும். கியாமத் நாளன்று அல்லாஹ், எந்த மக்களுக்கு நீங்கள் உலகில் வெளிக்காட்டி வந்தீர்களோ, பகட்டை வெளிப்படுத்தினீர்களோ அவர்களிடமே செல்லுங்கள். மேலும், அவர்களிடம் உங்களுக்கு ஏதாவது கைமாறு கிடைக்கிறதா? என்று பாருங்கள்! நீங்கள் சில செயல்களை அவர்களுக்குக் காட்டுவதற்காக செய்து வந்தீர்கள் அல்லவா? பிறகு, அவர்களிடமே கைமாறைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறுவான். (முஸ்னதுல் இமாம் அஹ்மது பின் ஹன்பல்,

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

தொகுதி 7, பக்கம் 799)

எனவே, வெளிக்காட்டுதல் மற்றும் பகட்டு அதாவது, மக்களுக்குக் காட்டுவதற்கான பாசாங்கான கோட்பாடுகள் மற்றும் போலியான விஷயங்கள் ஆகிய இவை அல்லாஹ்வுக்கு முற்றிலும் விருப்பமற்றவையாகும். ஏனென்றால், அந்தச் செயல்களை நீங்கள் அல்லாஹ்வை மகிழ்விப்பதற்காக செய்யவில்லை. மாறாக, (மக்களுக்கு) காட்டுவதற்காக, அந்த மக்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக செய்து கொண்டிருப்பீர்கள்.

எனவே, நம்முடைய அமல்கள் என்னவாக இருக்கின்றன? என்று இந்த அளவு ஆழமான முறையில் நாமும் நம்மை ஆய்வு செய்து கொண்டிருக்க வேண்டும். ஏனென்றால், மறுமை உலகில் இப்படிப்பட்ட எந்த பாலமும் பயனளிக்காது. அல்லாஹ்வின் அருள் மட்டுமே பயனளிக்கும். மேலும், மாநபி (ஸல்) அவர்களின் சுன்னத்தின் படி அமல் செய்வது, அன்னாருக்குக் கட்டுப்படுதல், அன்னாரைப் பின்பற்றுதல் ஆகியவையே உண்மையில் பயனளிக்கக்கூடியவையாகும். அதை அல்லாஹ்வே பிடித்தமானதாக் கொண்டிருக்கின்றான். ஏனென்றால், அல்லாஹ்வே فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللّٰهُ என்று அன்னாரை அறிவிக்கச் செய்தான்.

பொருள்: என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்களை நேசிப்பான் என்று மக்களிடம் கூறிவிடுவீராக! (3:32)

பிறகு, ஒரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் அபூ ஹூரைரா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடமிருந்து அறிவிக்கிறார்கள்.

அன்னார் (ஸல்) கூறினார்கள்: அல்லாஹ் அவனது வழியில் (போருக்குப்) புறப்படும் நபருக்கு ஒன்று, நான் அவர் பெற்ற வெகுமதி அல்லது போர்ச் செல்வத்துடன் அவரைத் திருப்பி அனுப்பி விடுவேன் அல்லது அவரை சொர்க்கத்தில் நுழையச் செய்வேன் என்று தான் பொறுப்பேற்றுள்ளான்.

அதாவது, ஒன்று வெற்றி கிடைக்கும். அல்லது ஷஹீத் ஆகிறார் என்றால், அவர் சுவனத்தில் நுழைவார். நிபந்தனை என்னவென்றால், என் மீதான ஈமானும், என் தூதர்களை உண்மைப்படுத்தியதும் ஆகியவையே அவரைப் போருக்குப் புறப்படச் செய்திருக்க வேண்டும். ஈமான் உறுதிவாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பதும், அல்லாஹ்வின் தூதருக்குக் கட்டுப்பட்டவாறு பைஅத்துக்கான உரிமையை நிறைவேற்றிய வண்ணம் போருக்காகப் புறப்பட வேண்டும் என்பதும் நிபந்தனை ஆகும். நான் எனது சமுதாயத்தை சிரமத்தில் ஆழ்த்தி விடுவேன் என்று நான் எண்ணாமல் இருந்திருந்தால், நான் ஒவ்வொரு படைக் குழுவுடனும் சென்றிருப்பேன். எனது விருப்பமோ அல்லாஹ்வின் வழியில் கொல்லப்பட வேண்டும். பிறகு, உயிர்ப்பிக்கப்பட வேண்டும். பிறகு, கொல்லப்பட வேண்டும். பிறகு, உயிர்ப்பிக்கப்பட வேண்டும். பிறகு, கொல்லப்பட வேண்டும். மாநபி (ஸல்) அவர்கள் தமது விருப்பத்தை வெளிப்படுத்தினார்கள்.

இந்த ஹதீஸுக்கான விரிவுரையில் ஹஸ்ரத் ஸய்யித் வலியுல்லாஹ் ஷாஹ் ஸாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்.

புஹாரீயின் அறிவிப்பு ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதாவது, எனது சமுதாயம் சிரமத்தில் ஆழ்ந்து விடும் என்ற சிந்தனை எனக்கு இல்லாமல் இருந்திருந்தால், நான் அவ்வாறு செய்திருப்பேன் என்று கூறியிருக்கின்றார்களே! இதன் பொருளாவது, ஸஹாபா பெருமக்களுக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்ற வேண்டும் என்ற மேலான பேராசை இருந்தது என்பதை நபி பெருமானார் (ஸல்) அவர்கள் நன்றாக அனுபவம் மூலம் அறிந்திருந்தார்கள். பெரும்பாலான மக்களுக்குப் பெரிய ஆசை இருந்தது. அன்னாரைப் பின்பற்ற விரும்பினார்கள். பின்பற்றவும் செய்தார்கள். அன்னாருடைய அழகிய முன்மாதிரியில் எந்த அளவு ஈர்ப்பு விசையும், தாக்கமும் இருந்தது என்றால், சுயமே நபி பெருமானார் (ஸல்) அவர்களுக்கு நற்செயல்கள் புரிவதில் தமது உம்மத்தைப் பற்றிய சிந்தனை இருந்து வந்தது.

அதாவது, அன்னாருடைய அமல் செய்தல் அவர்களை அதிகம் சிரமத்தில் ஆழ்த்திவிடக்கூடிய வடிவத்தைப் பெற்றுவிடக் கூடாது. அதாவது, அன்னார் (ஸல்) ஒவ்வொன்றையும் கடமையாக்கிவிட்டால், உம்மத் சிரமத்தில் விழுந்து விடும். எனவே, அன்னார் (ஸல்) கூறினார்கள்:

நீங்கள் சிரமத்தில் மூழ்கி விடக் கூடாது என்பதற்காகத்தான் நான் சில வேளை செல்வதில்லை. ஸய்யித் வலியுல்லாஹ் ஷாஹ் ஸாஹிப் அவர்கள் பிறகு எழுதுகிறார்கள்:


அன்னாருக்கு அல்லாஹ்வின் மீது அளப்பரிய நேசம் இருந்தது. எதிரிகள் கூட அதாவது, முஹம்மது (ஸல்) தம் இறைவன் மீது அளவு கடந்த நேசம் கொண்டிருக்கிறார் என்ற சொற்களில் இந்த நேசத்தைப் பற்றியே கூறி வந்தார்கள். ஆனால், அந்த நேசத்துடன் சேர்த்து தமது நஃப்ஸ் மீது கட்டுப்பாடும் இருந்தது. அறிவு ஒரு கணம்கூட அன்னாருக்கு உதவாமல் இருக்கவில்லை.

எவர்கள் தம்முடைய அமல்களில் மக்களிடம் வேலை வாங்குகிறார்களோ அவர்களுக்கு இதில் ஒரு பாடம் உள்ளது. கண்மூடித்தனமாக தம்முடைய உணர்வுகளுக்குப் பின்னால் செல்வது, உயர்ந்த ஈமானின் அடையாளமும் கிடையாது; ஓர் உயர்ந்த நன்மையும் கிடையாது. சில மக்கள் எங்களுக்குத் தன்மானம் இருக்கிறது; நாம் இதை செய்ய வேண்டும். அதை செய்ய வேண்டும் என்று கூறுகிறார்கள்.

அல்லாஹ் நடுநிலையை விரும்புபவன் ஆவான். நடுநிலையான எல்லையில் நிலைத்திருப்பது நன்மையின் உயர்வாகும். ஏனெனில், அதில் ஆன்மாவுடன் போராட வேண்டி வருகிறது. எனவே, இங்கு ஆன்மாவுடன் போராட்டமும் இருக்கிறது. அல்லாஹ்வின் மீதான நேசமும் இருக்கிறது. இரண்டையும் முன்னிறுத்தியவாறு பணிபுரிய வேண்டும். கண்மூடித்தனமாக சென்றோம் என்று இருக்கக் கூடாது.

நபி பெருமானார் (ஸல்) அவர்கள் தம்முடைய எடுத்துக்காட்டுகளை நிலைநாட்டி நமக்கு எத்தகைய ஒரு பாதையைக் காட்டி விட்டார்கள் என்றால், இறைவன் மீதான நேசமும் எல்லையை அடைந்திருக்கிறது. தம்முடைய விருப்பங்களை வெளிப்படுத்துவதிலும் எல்லையை அடைந்திருக்கிறது. மேலும், தியாகத்திலும் எல்லையை அடைந்திருக்கிறது. ஆனால், அத்துடன் சேர்த்து அறிவு மற்றும் நடுநிலையான வழியும் உள்ளது. அதுவும் கூட அதை மேற்கொள்ளுமாறு அல்லாஹ்வே கட்டளையிட்டிருப்பதனால்தான் இருக்கிறது.

ஓர் அறிவிப்பில் வருகிறது, அன்னார் இணைவைப்பாளர்களிடம் உதவி பெறுவதைக் கடுமையாக வெறுத்தார்கள். அன்னாருடைய




தூய துணைவியார் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பத்ரை நோக்கிப் புறப்பட்டார்கள். அன்னார் (ஸல்) மதீனாவின் மேற்கு திசையில் மூன்று மைல் தொலைவில் உள்ள ஹர்ரத்துல் வபரஹ் என்ற இடத்தை அடைந்த போது, ஒரு மனிதர் அன்னாரைச் சந்தித்தார். மேலும், வீரத்தைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தார். அவர் மிகவும் வீரமான மனிதராக இருந்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஸஹாபா பெருமக்கள் அவரைப் பார்த்ததும், அவர் வந்து விட்டார்; நம்முடன் போரில் கலந்து கொள்வார் என்று மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்கள். அவர் பெருமானார் (ஸல்) அவர்களைச் சந்தித்தபோது அன்னாரிடம், நான் தங்களுடன் செல்வதற்காகவும், தங்களுடன் கலந்து கொள்வதற்காகவும் மற்றும் தங்களுக்கு உதவி புரிவதற்காகவும் வந்துள்ளேன் என்று பணிவுடன் கூறினார்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரிடம், நீர் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் மீது ஈமான் கொள்கிறீரா? என்று கேட்டார்கள். அவர் இல்லை என்றார். அப்படி என்றால், திரும்பிச் சென்று விடுவீராக!; ஏனெனில், நான் எந்த இணைவைப்பாளரிடமும் உதவி பெற மாட்டேன் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அப்பொழுது அவர் சென்று விட்டார். ஆனால், நாங்கள் மதீனாவிலிருந்து 7 மைல் தொலைவில் ஜுல்ஹுலைஃபாவில் இருந்த ஷஜரஹ் எனப்படும் மரத்தை அடைந்தோம். அங்கிருந்துதான் மாநபி (ஸல்) அவர்கள் இஹ்ராம் அணிந்து வந்தார்கள். அங்கு இந்த நபர் மீண்டும் வந்தார்; அன்னாரிடம் வந்தார். இவர் அன்னாரைச் சந்தித்தார். முதல் முறை கூறியது போன்றே கூறினார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரிடம் முதலில் கூறியது போன்றே கூறினார்கள். திரும்பிச் சென்று விடுவீராக! நான் எந்த இணைவைப்பாளரிடமும் உதவி பெற மாட்டேன் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். பிறகு, அவர் திரும்பிச் சென்று விட்டார். அடுத்து, மக்காவுக்கும், மதீனாவுக்கும் நடுவில் ஜுல்ஹுலைஃபாவைத் தாண்டி இருக்கின்ற பைஸா எனும் இடத்தில் அன்னாரைச் சந்தித்தார்.

எவ்வாறாயினும், அங்கு பெருமானார் (ஸல்) அவர்கள்,

அவரிடம் மீண்டும் முதலில் கூறியது போன்றே கூறினார்கள். அதாவது, நீர் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் மீது ஈமான் கொள்கின்றீரா? என்று கேட்டார்கள். இப்பொழுது, ஆமாம்! என்று அவர் கூறினார். எனவே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரிடம், இப்பொழுது புறப்படுவீராக! இப்பொழுது நீர் எங்களுடன் புறப்படலாம் என்று கூறினார்கள்.

ஆக, நிலைமைகள் எப்படியிருந்தாலும், அல்லாஹ்வுடன் அன்பு மற்றும் தன்மானமானது, ஓர் இணைவைப்பாளரிடம் உதவி பெறுவதைப் பொறுத்துக் கொள்ள முடியாததாக இருந்தது. அதுவும் குறிப்பாக, இறைவனின் திருப்தி மற்றும் மார்க்கத்திற்காக செய்யப்படும் பணியில்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பாருங்கள்! எவ்வளவு இறைஞானம் இருந்தது! எவ்வளவு எச்சரிக்கையாக இருந்தார்கள்! எவ்வாறு அல்லாஹ்வுக்கு அஞ்சிய வண்ணம் இருந்தார்கள். அன்னார் (ஸல்) எல்லா மனிதர்களைக் காட்டிலும் முழுமை பெற்றவராக இருந்தபோதிலும், எல்லா விதமான குற்றங்களை விட்டும் தூய்மையானவராக இருந்தபோதிலும், இறைவன் அன்னாருக்குப் பாதுகாவலனாகவும், கண்காணிப்பாளனாகவும் இருந்தான். பிறகும், இந்தத் தூய்மை மற்றும் பரிசுத்தத்தன்மை இருந்தும் நிலை எப்படி இருந்தது? என்றால், எந்நேரமும் அல்லாஹ்வுக்கு அஞ்சியவாறு இருப்பார்கள். நன்மைக்கு மேல் நன்மை புரிவார்கள். உயர்ந்ததிலும் உயர்ந்த நற்செயல்கள் புரிவார்கள். ஒரு நன்மைக்குப் பிறகு இன்னொரு நன்மை என செய்து கொண்டே செல்வார்கள். ஒருபோதும் தீமை என்ற பேச்சுக்கே இடம் இருக்கவில்லை. அதன் நிழல் கூட இருந்ததில்லை. உயர்ந்ததிலும் உயர்ந்த நற்செயல்கள் புரிந்து வந்தார்கள். எந்நேரமும் இறைவனை வணங்குவதில் மூழ்கியிருப்பார்கள். அவ்வாறு இருந்தும், அஞ்சுவார்கள்; மிகவும் அஞ்சி வந்தார்கள். தம் புறமிருந்து இயன்ற அளவு எச்சரிக்கையாக இருப்பார்கள். ஆனால், இறைவனின் பக்கம் பார்வையை செலுத்துவார்கள். அவனுடைய கம்பீரத்தைப் பார்க்கும் போது, அந்தத் தனித்தவனின் அவையில் தம்முடைய அனைத்து நற்செயல்களையும் மறந்து விடுவார்கள். இஸ்திஃக்ஃபார் செய்வார்கள். வாய்ப்பு கிடைக்கும் போது தவ்பா செய்வார்கள்.

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இது புஹாரீயின் ஹதீஸ் ஆகும்.

பொருள்: நான் நபி பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக்கேட்டேன்:

இறைவன் மீது ஆணையாக! நான் ஒரு நாளுக்கு 70 முறைக்கு மேல் இறைவனுக்கு முன்னால் என்னுடைய பலவீனங்களுக்காக மன்னிப்புக்கான கோரிக்கை விடுக்கின்றேன். அவன் பக்கம் குனிந்து விடுகின்றேன். 70 எனும் இந்த சொல்லும் கூட, அரபியில் எண்ணற்ற என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. எண்ணற்ற முறையில் இதைச் செய்கிறேன். அல்லாஹ்வின் மீதான நேசத்தின் நிலைமை எப்படி இருந்தது? என்றால், எல்லாத் தருணத்திலும் அருளுக்குரிய நாவு இறைவனை நினைவுகூர்வதில் நனைத்திருந்தது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எல்லா நிலையிலும் இறைவனை நினைவு கூறி வந்தார்கள்.

இது குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் எடுத்துரைத்துள்ளார்கள். ஹதீஸ்களில் இருந்தும் நிரூபணமாவதாவது, எல்லா நேரமும் அன்னாரது நாவு இறைவனை நினைவு கூர்வதில் நனைந்திருந்தது. ஹஸ்ரத் ஸம்ரஹ் பின் ஜந்தப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நான்கு விஷயங்கள் அனைத்துக் கூற்றுகளைக் காட்டிலும் சிறந்தவையாகும். அதில் எதிலிருந்து நீ துவங்கினாலும், அதில் உமக்கு எந்த இழப்பும் இல்லை. இந்த விஷயங்களைக் கொண்டு துவங்கினால் எல்லாவற்றையும் விடச் சிறந்தவையாகும். சிறந்த மற்றும் அருளுக்குரிய விஷயங்கள் ஆகும். அவை யாவை? ஒன்று, سبحان الله இரண்டாவது, الحمد لله. மூன்றாவது, لا اله الا الله நான்காவது, الله اكبر .பொருள்: அல்லாஹ் தூயவன்; எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரித்தாகும்; அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறு எவரும் இல்லை மற்றும் அல்லாஹ்

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

எல்லாரையும் விடப் பெரியவன் ஆவான் என்பனவாகும்.

ஆக, இந்த விஷயங்கள் எத்தகையவை என்றால், எப்பொழுதும் மனிதனின் சிந்தனையில் இருந்தால், எந்நேரமும் அவற்றை நினைவில் கொண்டால், பேசும்போது அல்லது வேலை செய்யும்போதும், இந்த விஷயங்களை முன்னிறுத்தினால், அவற்றில் பரக்கத்தே பரக்கத் ஏற்படும்.

இவ்வாறே ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் பஸர் அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு கிராமவாசி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து, இஸ்லாத்தின் சட்டங்கள் மற்றும் நற்செயல்கள் எனக்கு மிகவும் அதிகமாகி விட்டன என்று கூறினார்.

அதாவது, இவ்வளவு சட்டத் திட்டங்கள், கட்டளைகள் மற்றும் நன்மை குறித்த விஷயங்கள் உள்ளன. என்னைப் போன்ற மனிதனுக்கு மிகவும் அதிகமாக ஆகி விட்டன. கிராமவாசிகளாக இருந்தார்கள். இது போன்ற கேள்விகள் கேட்டு விடுவார்கள்.

ஹுஸூர் (ஸல்) அவர்களே! அவற்றில் ஏதாவது ஒரு விஷயத்தைக் கூறுங்கள்; நான் அவற்றைக் கடைபிடிக்கிறேன்; அதை முறையாகப் பேணுகிறேன். அதையே அதிகப்படியாக செய்து வருகிறேன் என்று அவர் கூறினார்.

நபி பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உமது நாவு தொடர்ச்சியாக இறைதியானத்தில் நனைந்திருக்கட்டும். உனது நாவை இறைதியானத்தில் நனைத்து வை. அன்னார் (ஸல்) கூறினார்கள்:

அதாவது, உனது நாவு எப்பொழுதும் தொடர்ச்சியாக இறைநினைவில் நனைந்திருக்கட்டும்!

பிறகு, ஓர் அறிவிப்பில் வருகிறது, ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எல்லாவற்றையும் விடச் சிறந்த திக்ர் لا اله الا الله ஆகும். எல்லாவற்றையும் விடச் சிறந்த துஆ الحمد لله ஆகும்.

ஓர் அறிவிப்பில் வருகிறது, ஹஸ்ரத் அபூ உமாமா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ்வின் புறமிருந்து, பத்ஹா பகுதியை, அதாவது, மக்காவைத் தங்கத்தால் ஆனதாக ஆக்கி விடுவதாக எனக்கு முன்னால் எடுத்து வைக்கப்பட்டது. அதற்கு, என் இறைவா! அதற்கு மாறாக, நான் ஒருநாள் வயிறு நிறைய உண்ண வேண்டும்; ஒருநாள் பட்டினியாக இருக்க வேண்டும்.

ஆக, நான் பசித்தவனாக இருக்கும்போது உனக்கு முன்னால் அழுது மன்றாடுவேன். உன்னை நினைவுகூர்வேன்; நான் வயிறார உணவு உண்ணும்போது உன்னைப் புகழ்ந்து உனக்கு நன்றி செலுத்துவேன்; எனக்கு இது வேண்டாம்; எனக்கோ நீ எப்பொழுதும் நினைவில் இருப்பதுதான் வேண்டும். பொன்னும், பொருளும் அதிகமாகி விட்டால், அதனால் உனது நினைவு இல்லாமல் ஆகி விடக்கூடாது என்று நான் கூறினேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: நபி பெருமானார் (ஸல்) அவர்கள் தம் மீது இந்த கடினம் அல்லது சிரமத்தைப் சகித்துக் கொண்டிருந்தார்கள் அல்லது இவ்வாறு கூற வேண்டும். அதாவது பொருளாதார அடிப்படையில் அன்னாரது நிலைமை பலவீனமானதாக இருந்தது! இந்த நிலையானது, அல்லாஹ் அன்னாருக்கு வழங்கவில்லை என்பதனால் அன்னாருக்கு ஏற்படவில்லை. மாறாக, அல்லாஹ் அளவற்ற முறையில் வழங்கினான். ஆனால், அல்லாஹ்வின் மீதான நேசம் மற்றும் அவனது நினைவில் அன்னார் (ஸல்) ஏழ்மை வாழ்வைக் கழிப்பதை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால், அன்னார் (ஸல்) அருட்கொடைகளை நிராகரித்தார்கள் என்பதும் கிடையாது. நன்றாக சமைக்கப்பட்ட உணவுகள் மற்றும் அருட்கொடைகளையும் உண்டு வந்தார்கள். அதற்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி வந்தார்கள்.

இவ்வாறே ஓர் அறிவிப்பில் வருகிறது, ஹஸ்ரத் அபூ பக்ரஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எப்பொழுது ஒரு விஷயம், ஒரு மகிழ்ச்சிக்குரிய விஷயம் ஏற்பட்டாலோ அல்லது அன்னாருக்கு ஏதாவது ஒரு விஷயம் பற்றிய நற்செய்தி கூறப்பட்டாலோ அன்னார் (ஸல்) உடனடியாக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்காக ஸஜ்தாவில் விழுந்து விடுவார்கள். அல்லாஹ்வுக்கு முன்னாலேயே அனைத்து நன்றி செலுத்துதலும் இருக்கிறது. அவன் மீதான அன்பு மற்றும் அவனைப் புகழ்வதன் எதிர்ப்பார்ப்பே, அவனுடைய அடியாராக இருப்பதன் எதிர்பார்ப்பே அவனுக்கு முன்னால் உடனடியாகக் குனிவதும் அவனுக்கு நன்றி செலுத்துவதும்

ஆகும்.

ஹஸ்ரத் பராஃ பின் ஆஸிப் (ரலி) அவர்கள் விவரிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் உங்கள் படுக்கைக்கு வரும்போது, தொழுகைக்காக நீங்கள் செய்யும் உளூவைப் போன்று உளூ செய்து விட்டு வாருங்கள். அதாவது, உறங்குவதற்கு முன் உளூ செய்து கொள்வது நல்ல விஷயம் ஆகும். பிறகு, உங்களுடைய வலது பக்கம் திரும்பிப் படுங்கள். மேலும், துஆக்கள் ஓதுங்கள். அந்த துஆக்களின் மொழியாக்கத்தை நான் படிக்கிறேன். இவையாகும்: அல்லாஹ்வே! நான் உனக்கு அஞ்சியவாறும், உன்னை நேசித்தவாறும் என்னை உனது பொறுப்பில் கொடுத்து விட்டேன். எனது பணியை உன்னிடம் ஒப்படைத்து விட்டேன். உன்னை எனக்கு ஆதரவாக ஆக்கிக் கொண்டேன். உன்னைத் தவிர அடைக்கலம் புகுமிடம் வேறெதுவுமில்லை. ஈடேற்றத்திற்கான எந்த இடமும் இல்லை. ஈடேற்றம் உன்னிடம் மட்டுமே உள்ளது. நீ இறக்கிய அந்த மறையின் மீது நான் ஈமான் கொண்டுள்ளேன். நீ அனுப்பிய அந்த நபியின் மீது ஈமான் கொண்டுள்ளேன்.

இந்த துஆவை செய்து வருவீராக! ஒருவேளை நீர் அந்த இரவு மரணித்து விட்டால், இயல்பில் மரணித்தவர் ஆவீர் என்று ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனவே, இந்தச் சொற்களை உங்களுடைய இறுதிக் கூற்றாக ஆக்கிக் கொள்ளுங்கள். அறிவிப்பாளர் கூறுகின்றார்: நான் இந்தச் சொற்களை மனனம் செய்து கொள்வேன் என்று பணிவுடன் கூறினேன். நான் அவற்றை மீண்டும் கூறியவாறு,

. وَبِرَسُوْلِكَ الَّذِىْٓ اَرْسَلْتَ

என்று கூறினேன். மேலும், நீ அனுப்பிய உன் தூதர் மீது என்றும் கூறுவேன். இந்தச் சொற்களையும் இணைத்துக் கொள்வேன் எனக் கூறினேன். இதற்கு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

وَبِنَبِيِّكَ الَّذِىْٓ اَرْسَلْتَ

பொருள்: மேலும், நீ அனுப்பிய உன் நபியின் மீது என்று கூறு என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எந்த நேரமும் மரணத்தை விட்டும் கவனமற்றவர்களாக இருக்க மாட்டார்கள். மேலும், இறைவன் மீதான அச்சம் அன்னாரிடம் எந்த அளவு மேலோங்கியிருந்தது என்றால், ஒவ்வொரு நாளும், இன்றே மரணம் வந்து விடும்; இன்றே அல்லாஹ்வுக்கு முன் செல்ல வேண்டி வரும் என்று உறுதியாக நம்பிக்கை வைத்து உறங்குவார்கள்.

எனவே, இரயில் இதோ இப்பொழுது புறப்பட்டு விடும்; இப்பொழுது புறப்பட்டு விடும் என்று நினைக்கும் ஒரு பயணியைப் போன்று அன்னார் (ஸல்) வாழ்ந்து வந்தார்கள். **அவர் ஒருபோதும் விடுபட முடியாத சிக்கல்களில்ம் தன்னை சிக்கவைத்துக் கொள்ள மாட்டார். இரயிலில் ஏற வேண்டுமென்றால், இங்கும் அங்கும் தாமதமாகி விடக்கூடாது; அல்லது புறப்பட்டு விடக் கூடாது என்பதற்காக அவர் வண்டிக்கு காத்துக் கொண்டிருப்பார்.**

ஆக, அன்னாரும் எந்நேரமும் தம் அன்பனுக்கு முன்னால் செல்வதற்காக ஆயத்தமாக இருப்பார்கள். மேலும், கழியும் ஒவ்வொரு நொடிப் பொழுதையும் அவனது அருளின் விளைவாகக் கருதுவார்கள். மரணத்தை நினைவில் வைத்திருப்பார்கள்.

ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஒரு பழக்கம் இருந்தது. அன்னார் (ஸல்) படுக்கைக்கு செல்லும்போது, தமது கன்னத்துக்குக் கீழ் தமது கையை வைத்துக் கொண்டு, என் எஜமானனே! நான் மரணிப்பதும், நான் உயிர்வாழ்வதும் உனது பெயராலேயே இருக்க வேண்டும் என்று கூறுவார்கள்.

உறங்கி எழுந்ததும், எங்களை மரணிக்கச் செய்த பிறகு உயிர்தெழச் செய்த என் இறைவனுக்கு நன்றி! நாம் அவன் பக்கமே திரும்பி செல்ல வேண்டியுள்ளது என்று கூறுவார்கள்.

இந்த நிகழ்விலிருந்து தெரியவருவதாவது, அன்னார் (ஸல்) ஒவ்வோர் இரவும் படுக்கைக்கு செல்லும்போது தம் புறமிருந்து கணக்கை முடித்து விட்டுச் செல்வார்கள். மேலும், இறைவனிடம், நான் மரணித்து விட்டால், அப்பொழுதும் உனது பெயரிலேயே எனது வாழ்வு இருக்க வேண்டும் என்று துஆ கேட்பார்கள்.

உறங்கி எழும்போது, நானோ என் புறமிருந்து உலகை விட்டுத் தனியாகி விட்டேன். நீ என்னை மீண்டும் உயிர்த்தெழச் செய்ததும், எனது ஆயுளில் பரக்கத்தை ஏற்படுத்தியதும் உனது அருளே ஆகும் என்று இறைவனின் பேரருளுக்காக அவனைப் புகழ்வார்கள்.

எவ்வாறு முதல் துஆவின் மூலம் நபி பெருமானார் (ஸல்) அவர்கள் எந்நேரமும் மரணத்தை நினைவில் வைத்திருப்பார்கள் என்பது தெரிய வந்ததோ, அவ்வாறே இந்த துஆவும் உள்ளது. இந்த விஷயத்துக்குச் சான்றாக உள்ளது.


இன்னொரு துஆவும் உள்ளது. அன்னார் (ஸல்) தமது வாழ்வின் ஒவ்வொரு நொடிப் பொழுதையும் இறுதி நொடிப் பொழுதாகக் கருதி வந்தார்கள். அன்னார் (ஸல்) உறங்கும்போது, தம் இறைவனிடம் தம் விவகாரங்களைத் தீர்த்துக் கொள்வார்கள். ஒரு வகையில் ஒவ்வொரு மாற்றத்துக்காகவும் ஆயத்தமாகி விடுவார்கள்.

ஆக, ஹஸ்ரத் பராஃ பின் ஆஸிஃப் (ரலி) அவர்களுடைய அறிவிப்பு வருகிறது. அவர்கள் கூறுகிறார்கள்: நபி பெருமானார் (ஸல்) அவர்கள் தமது படுக்கையில் சென்று படுக்கும்போது, தமது வலது பக்கம் திரும்பிப் படுப்பார்கள். பிறகு, என் இறைவா! நான் எனது உயிரை உனது பொறுப்பில் கொடுக்கிறேன். எனது முழு கவனத்தையும் உன் பக்கம் திருப்புகிறேன். நான் எனது விவகாரத்தை உன் கையில் ஒப்படைக்கிறேன். என்னையே நான் உனது அடைக்கலத்தில் ஒப்படைக்கிறேன். உன்னிடமிருந்து பலனுக்கான நம்பிக்கை வைத்துள்ளேன். உனது பெருமை மற்றும் பொருட்படுத்தாமை என்பதற்கு அஞ்சியவனாக இருக்கிறேன். உனது சினத்தில் இருந்து தப்பிப்பதற்காக எந்தப் புகலிடமும் இல்லை; ஈடேற்றத்திற்கான எந்த இடமும் இல்லை. ஆனால், உன்னிடமே ஈடேற்றம் மற்றும் அடைக்கலம் தேட வேண்டியுள்ளது. நான் நீ இறக்கிய மறையின் மீதும், நீ அனுப்பிய தூதரின் மீதும் ஈமான் கொள்கிறேன் என்று கூறுவார்கள்.

நமக்கு இந்த துஆவைக் கற்றுத் தந்துள்ளார்கள். ஆக, தாமும் அதை மிகவும் பேணி கடைபிடித்து வந்தார்கள்.

மக்கள் கடை அடைக்குமபோது, அதற்கான கணக்குப் பார்த்துக் கொள்வார்கள். தொழில் செய்யக்கூடியவர்கள் தம்முடைய கணக்கு வழக்கை முடித்து விட்டு உறங்குவார்கள். ஆனால், இறைவனுடனான அந்தக் கணக்கு வழக்கைத் தெளிவாக்கிக் கொள்வதில்லை. மக்களுக்கு அதைப் பற்றி கவலை இருப்பதில்லை. அந்த மாமனிதர் எவ்வளவு விருப்பமானவராக இருந்தார்கள்! காலை முதல் மாலை வரை இறைவனுக்கான உரிமைகளை நிறைவேற்றுவதில் மூழ்கியிருப்பார்கள். அதுவும், தாம் மட்டுமே அவற்றை நிறைவேற்றிடாமல், அத்துடன் சேர்த்து ஆயிரக்கணக்கான மக்களையும், அவர்களும் தங்களுடைய கடமைகளை நிறைவேற்றுகின்றார்களா? இல்லையா? என்று கண்காணித்து வந்தார்கள்.

ஆனால், இரவு உறங்கும் முன் தாம் செய்த அனைத்து முயற்சிகள் மற்றும் இறை வணக்கங்கள் ஆகியவற்றை மறந்து விட்டு, மிகவும் பணிவுடன் தம் எஜமானனுக்கு முன்னால் எப்படிக் கணக்கு வழக்கைத் தெளிவாக்கிக் கொள்வதற்காக நின்று விடுகின்றார்கள் என்றால், அன்னார் (ஸல்) எந்தத் தொண்டும் செய்யவே செய்யாதது போன்று இருக்கின்றார்கள். மேலும், தமது இன்னுயிரை முழுமையாக இறைவனிடம் ஒப்படைத்து விட்டு உலகம் மற்றும் அதில் இருப்பவற்றிலிருந்து விலகியிருத்தலை வெளிப்படுத்தாத வரை மற்றும் இறைவனின் கைகளில் தம்முடைய கைகளைக் கொடுத்து விடாத வரை உறங்கமாட்டார்கள்.

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

அறிவிப்பில் வருகிறது, ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: காலை தொழுகையில் இருந்து துவங்கி, சூரியன் உதிக்கும் வரை அல்லாஹ்வை நினைவுகூர்பவர்களுடன் அமர்வது எனக்கு ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களின் வழித்தோன்றல்களில் இருந்து நான்கு அடிமைகளை விடுதலை செய்வதைக் காட்டிலும் அதிகம் பிடித்தமானது. மேலும், அஸ்ர் தொழுகையிலிருந்து சூரியன் மறையும் வரை, அல்லாஹ்வை நினைவுகூர்பவர்களுடன் அமர்வது எனக்கு நான்கு அடிமைகளை விடுதலை செய்வதைக் காட்டிலும் அதிகம் பிடித்தமானது. அல்லாஹ்வுடனான அன்பின் காரணமாக அல்லாஹ்வின் மீது அன்பு செலுத்தக்கூடியவர்கள் மற்றும் அவனை நினைவுகூர்கின்றவர்களை ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களின் வழித்தோன்றல்கள், தம் உறவினர்கள், தமக்கு நெருக்கமானவர்களை விட முதன்மை அளித்தார்கள். அவர்கள் அனைவருடைய அடிமைத்துவத்தையோ அன்னார் (ஸல்) பொறுத்துக் கொள்வார்கள். ஆனால், இந்தப் பிரிவை அன்னாரால் பொறுத்துக் கொள்ள முடியாது.

ஓரிடத்தில் அல்லாஹ்வை நினைவுகூரப்படுகின்றது; அல்லாஹ்வின் மீதான நேசம் நினைவுகூரப்படுகின்றது என்றால், நான் அந்த அவையை விட்டும் விலகியிருப்பது எப்படி சாத்தியமாகும்! (என்று கூறுகிறார்கள்)

அல்லாஹ்! அல்லாஹ்! இறைநேசத்திற்கான என்னே ஒரு மேன்மை!

அதாவது, அதை அன்னார் (ஸல்) மக்களிடமும் உருவாக்குகிறார்கள். சுயமே அன்னாரிடமும் இந்த மேன்மை எல்லையை எட்டியுள்ளது. பிறகு, தம்மை ஏற்றுக் கொண்டவர்களுக்கு, நீங்கள் அல்லாஹ்வின் மீதான நேசம் மற்றும் நினைவுகூர்தல் எந்நேரமும் மூழ்கியிருங்கள் என்று அறிவுரை வழங்குவார்கள்.

அன்னார் (ஸல்) கூறினார்கள்: அல்லாஹ்வின் பார்வையில் அனைத்தையும் விடப் பிரியமான அமல் என்னவென்றால், உனது நாவு அவனை நினைவுகூர்வதில் நனைந்திருக்கும் நிலையில் உனக்கு மரணம் வர வேண்டும்.

அறிவிப்பில் வருகிறது, ஹஸ்ரத் அபூதர்தா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் உங்களுக்கு ஆகச் சிறந்த ஓர் அமலைப் பற்றி சொல்ல வேண்டாமா? அது எல்லாவற்றையும் விடச் சிறந்தது; உங்கள் எஜமானனுடைய பார்வையில் அனைத்திலும் தூய்மையானது; உங்களுடைய தரத்தை எல்லாவற்றையும் விட உயர்த்தக்கூடியது; தங்கத்தையும், வெள்ளியையும் செலவு செய்வதைக் காட்டிலும் உங்களுக்குச் சிறந்தது; நீங்கள் எதிரிகளை எதிர்கொள்வதைக் காட்டிலும் உங்களுக்குச் சிறந்தது. நீங்கள் அவர்களின் தலையை சீவி விடுவதையும், அவர்கள் உங்கள் தலையை சீவி விடுவதையும் விட சிறந்ததாகும்.

அதாவது, எதிரியுடன் போர் புரிவது, எதிரியை எதிர்கொள்வது, ஒருவர் மற்றவரைக் கொல்வது, போர் நடப்பது போன்ற அவற்றிற்கு நீங்கள் ஜிஹாது என்று பெயர் வைத்தாலும் கூட, அதையும் விடச் சிறந்த விஷயம் நான் உங்களுக்குக் கூறக்கூடிய இந்த விஷயம் ஆகும்.

ஸஹாபா பெருமக்கள் (ரலியல்லாஹு அன்ஹும்), ஏனில்லை! என்று பணிவுடன் கேட்டார்கள்.

தற்காலத்தில் முஸ்லிம்கள் ஜிஹாது எல்லாவற்றையும் விடச் சிறந்தது என்று கூறுகின்றார்கள் அல்லவா? தலைகளை வெட்டுங்கள் என்கிறார்களே, எதிரிகளின் தலைகளை வெட்டுவதில்லை; தம்மவர்களின் தலைகளை வெட்டுகிறார்கள். அது எல்லாவற்றையும் விடப் பெரிய குற்றமாகும்.

எவ்வாறாயினும், ஆக, இங்கு ஹுஸுர் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் உங்களுக்குக் கூறப்போகும் விஷயம் அதை விடச் சிறந்ததாகும். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அது அல்லாஹ்வை நினைவுகூர்வதாகும். அல்லாஹ்வை நினைவுகூர்ந்திடுங்கள். இது எல்லா ஜிஹாதை விடவும் சிறந்த ஜிஹாது ஆகும்.

முஸ்லிம்கள் மீதோ பழி சுமத்தப்படுகிறது. ஆனால், போதனையோ இதுவாகும்.

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வை நினைவுகூர்வதை விட அதிகம் எந்தவொரு விஷயமும் அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து காப்பாற்றக் கூடியதல்ல. அல்லாஹ்வை நினைவுகூர்ந்தால், அதனால் அல்லாஹ் பல விஷயங்கள் மற்றும் தண்டனைகளில் இருந்து உங்களுக்கு ஈடேற்றம் அளிப்பான். அல்லாஹ்வின் மீதான நேசத்தின் காரணமாக அல்லாஹ்வை எந்நேரமும் நினைவுகூர்வது அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு மிக மிகப் பிடித்தமானதாக இருந்தது.

ஆக, அறிவிப்பில் வருகிறது, ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

سبحان الله

அல்லாஹ் தூயவன், الحمد لله எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

لا اله الا الله

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறு எவரும் இல்லை மற்றும்

الله اكبر

அல்லாஹ் எல்லாரையும் விடப் மிகப் பெரியவன் என்று நான் கூறினால், இது எனக்கு சூரியன் உதயமாகின்ற ஒவ்வொரு விஷயத்தை விடவும் அதிகம் பிடித்தமானதாகும். வாழ்வின் இறுதி நொடிப் பொழுதிலும், நபி பெருமானார் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய நாவில் அந்த உண்மையான அன்பனின் பெயரே இருந்தது. இது இறைவன் மீதான நேசத்திற்கான உணர்வாகும்.

இதன் காரணமாகவே, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நபி பெருமானார் (ஸல்) அவர்கள் உடல்நிலை நன்றாக இருக்கும்போது இவ்வாறு கூறி வந்தார்கள்: ஒரு நபி மரணம் அடையும் போது, அவர் சுவனத்தில் தன் இருப்பிடத்தைப் பார்த்து விடுகிறார். எந்த நபியும் சுவனத்தில் தனது இருப்பிடத்தைப் பார்க்காத வரை மரணிக்க மாட்டார். பிறகு, அவருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது என்று கூறி வந்தார்கள்.

பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரண நேரம் நெருங்கிய போது, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அவருக்கு சுவனம் காட்டப்படுகிறது என்று உடல்நிலை நன்றாக இருந்த தருணத்தில் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். மாநபி (ஸல்) அவர்களின் மரண நேரம் வந்தபோது, அன்னாருடைய அருளுக்குரிய தலை என் மடி மீது இருந்தது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அன்னாருக்கு மயக்கம் ஏற்பட்டது. பிறகு, அன்னாரது உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டது. பிறகு, அன்னார் (ஸல்) வீட்டின் கூரையை நோக்கி பார்வையை உயர்த்தினார்கள். பிறகு,

اَللّٰهُمَّ الرَّفِيْقَ الْاَعْلٰى

என்று கூறினார்கள். பொருள்: உயர்ந்த தோழனாகிய அல்லாஹ்வே! அதைக் கேட்டநான், இப்பொழுது தாங்கள் எங்களுக்கு உரிமை வழங்கமாட்டீர்களா? இப்பொழுது இந்த விஷயத்தால் தாங்கள் அல்லாஹ்விடம் செல்லப்போவதாகத் தெரிகிறதே என்று கேட்டேன். அன்னார் (ஸல்) உடல்நிலை நன்றாக இருந்த

A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM
Dealers of Natural Precious & Semi-Precious Gemstones
TOONICE
Tamil Nadu, India
Al-Nida GEMS
Tamil Nadu, India
HG GEMS
HANIYAHANA GEMS CO., LTD.
Thailand

போது எங்களிடம் கூறி வந்த அதே விஷயம்தான் இது என்று நான் புரிந்து கொண்டேன்.

அதாவது, இந்தத் தேர்ந்தெடுக்கும் உரிமை கிடைக்கிறது என்றால், இப்பொழுதோ நான் அல்லாஹ்விடம் செல்கிறேன்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவித்தார்கள்: மாநபி (ஸல்) அவர்கள் எடுத்துரைத்த கடைசி கூற்று என்பது இதுவாக தான் இருந்தது.

اَللّٰهُمَّ الرَّفِيْقَ الْاَعْلٰى

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் பிறிதோரிடத்தில் விவரிக்கிறார்கள்: அல்லாஹ் என் மீது புரிந்த அருட்கொடைகளில் ஒன்று, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என் வீட்டில், எனது முறை இருக்கும் நாளில், எனது நெஞ்சுக்கும், மடிக்கும் நடுவில் மரணித்தார்கள் என்பதும் ஆகும். மேலும், அல்லாஹ் அன்னாரது மரண நேரத்தில் எனது உமிழ்நீரையும், பெருமானார் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய உமிழ்நீரையும் ஒன்றிணைத்தான். அது ஒன்றிணைந்த விஷயத்தை இவ்வாறு விவரிக்கிறார்கள்:

அப்துர் ரஹ்மான் என்னிடம் வந்தார்கள். அவர்களுடைய கையில் மிஸ்வாக் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என் மீது சாய்ந்திருந்தார்கள். அன்னார் (ஸல்) அதன் பக்கம் பார்ப்பதை நான் கண்டேன். அன்னாருக்கு மிஸ்வாக் செய்வது பிடிக்கும் என்று எனக்குத் தெரியும். நான், ‘தங்களுக்காக நான் அதை வாங்கட்டுமா?’ என்று பணிவுடன் கேட்டேன். அன்னார் (ஸல்) ஆம்! என்று தலையை அசைத்துக் கூறினார்கள். நான் அதை அன்னாருக்குக் கொடுத்த போது, அது அன்னாருக்குக் கடினமானதாக இருந்தது. ‘அதை நான் தங்களுக்கு மென்மையாக்கிக் கொடுக்கட்டுமா?’ என்று நான் பணிவுடன் கேட்டேன். அன்னார் (ஸல்) ஆம்! என்று தம் தலையை அசைத்துக் கூறினார்கள். நான் அதை மென்மையாக்கினேன். அன்னாருக்கு முன்னால் சிறிய பாத்திரம் இருந்தது. அதாவது, பிறகு வாயில் போட்டு அந்த மிஸ்வாக்கை மென்மையாக்கினார்கள். அன்னாருக்கு முன்னால் சிறிய பாத்திரமோ அல்லது பெரிய பாத்திரமோ இருந்ததாகக் கூறினார்கள்.

அறிவிப்பாளருக்குப் பாத்திரத்தின் அளவைப் பற்றி ஐயம் உள்ளது. எவ்வாறாயினும், நபி (ஸல்) அவர்களுக்கு முன்னால் தண்ணீர் பாத்திரம் இருந்தது. அன்னார் (ஸல்) தமது அருளுக்குரிய கைகளைத் தண்ணீரில் இடுவார்கள். பிறகு, அவற்றைத் தமது அருளுக்குரிய முகத்தில் தேய்ப்பார்கள். மேலும்,

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ اِنَّ لِلْمَوْتِ سَكَرَاتٌ

என்று கூறுவார்கள்:

பொருள்: அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறு எவரும் இல்லை. மரணத்தின் சிரமங்கள் இருக்கின்றனதான்.

பிறகு, அன்னார் (ஸல்) தமது கையை உயர்த்தினார்கள். மேலும், فِي الرَّفِيْقِ الْاَعْلٰى என்று கூறினார்கள்.

பொருள்: உயர்ந்த தோழனை நோக்கி. எதுவரை என்றால், அன்னார் (ஸல்) மரணமடைந்து விட்டார்கள். அன்னாரது கை தொங்கி விட்டது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

வல்ல இறைவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறுதி நேரத்தில், தேர்ந்தெடுக்கும் உரிமையை வழங்கினான். அதாவது, நீர் விரும்பினால் உலகில் வாழலாம். அல்லது விரும்பினால் என் பக்கம் வந்துவிடலாம் என்று தேர்ந்தெடுக்கும் உரிமையை வழங்கினான். அன்னார் (ஸல்) என் இறைவா! இப்பொழுது நான் உன் பக்கம் வருவதையே விரும்புகிறேன் என்று பணிவுடன் கூறினார்கள். அன்னாரது அருளுக்குரிய உயிர் பிரிந்தபோது, அன்னார் (ஸல்) கூறிய அந்தக் கடைசி சொற்றொடர் بِالرَّفِيْقِ الْاَعْلٰى என்பதாகும்.

பொருள்: இப்பொழுது நான் இந்த இடத்தில் இருக்க விரும்பவில்லை; நான் என் இறைவனிடம் செல்ல விரும்புகிறேன்; உயிர் வாழ விரும்பினால் அவ்வாறே நடக்கும் என்று அல்லாஹ் அன்னாருக்குத் தேர்ந்தெடுக்கும் உரிமையை வழங்கினான். ஆனால், அன்னார் (ஸல்) இப்பொழுது நான் இந்த உலகில் இருக்க விரும்பவில்லை என்றே கூறினார்கள்.

எனவே, அன்னார் (ஸல்) அல்லாஹ்விடம் சென்று விட்டார்கள்.

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ
وَبَارِكْ وَسَلِّمْ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், பிப்ரவரி 20,2026,பக்கம் 2-8)

தமிழாக்கம்
முரப்பி
அத்தாவுல் முஃக்னீ

*******

1-ம் பக்கத் தொடர்ச்சி...
(தஃப்ஸீரே கபீர்).

மாதத்தில் நபி (ஸல்) அவர்களைச் சந்திக்கும் போது, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இன்னும் அதிகமாக வாரி வழங்கும் கொடையாளியாகத் திகழ்வார்கள். ரமலான் மாதத்தின் ஒவ்வோர் இரவிலும் ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபியவர்களைச் சந்திப்பார்கள், அப்போது நபியவர்கள் அவருடன் திருக்குர்ஆனை ஓதி வந்தார்கள். ஜிப்ரீல் (அலை) அவர்கள் சந்திக்கும் அந்த நாட்களில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மழையைக் கொண்டு வரும் காற்றை விடவும் மிக வேகமாக நன்மைகளைச் செய்பவர்களாகவும், கொடையளிக்கக் கூடியவர்களாகவும் இருந்தார்கள்.

(தஃப்ஸீரே கபீர், பாகம்1,பக்கம்: 394 - 395)

*******

12-ம் பக்கத் தொடர்ச்சி...
(குத்பா பேருரை 6.2.26 )

நிரப்பப்பட்ட தோலால் ஆனதாக இருந்தது’ என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களிடம், தங்களுடைய வீட்டில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் படுக்கை எத்தகையதாக இருந்தது? என்று கேட்கப்பட்டது. அப்போது, அன்னார் (ரலி) கூறினார்கள்: அது கம்பளியால் ஆனதாக இருந்தது. அதாவது, விலங்குகளின் மென்மையான முடிகளால் செய்யப்பட்டிருந்தது. அதை நான் இரண்டு மடிப்புகளாக மடித்துப் போடுவேன், அது சற்று மென்மையானதாக ஆகிவிடும். அதன் மீது அன்னார் (ஸல்) உறங்குவார்கள். ஓர் இரவு, நான் அதை நான்கு மடிப்புகளாக மடித்தால் அன்னாருக்கு இன்னும் வசதியாகவும், மென்மையாகவும் இருக்குமே! என்று நினைத்தேன். ஆக நான் அவ்வாறு அதனை நான்கு மடிப்பாக மடித்து விட்டேன். காலை விடிந்ததும் நபி பெருமானார் (ஸல்) அவர்கள், 'நேற்று இரவு எனக்காக எதனை விரித்து வைத்தீர்கள்?' என்று கேட்டார்கள். அதற்கு, 'அது தங்களுடைய படுக்கையேதான்; ஆனால் அது, தங்களுக்கு அதிக வசதியாக இருக்கட்டும் என்று அதனை நான்கு மடிப்புகளாக மடித்தோம்' என்று நான் கூறினேன். அதற்கு, 'அதை பழைய நிலைக்கு (இரண்டு மடிப்புக்கு) மாற்றிவிடுங்கள்; ஏனெனில் அதன் கூடுதல் மென்மையானது எனது இரவு தொழுகைக்கு தடையாக இருக்கின்றது என்று நபி பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஷமாயில் அன்-நபவி, பக்கம் 134, பாடம்: நபிகள் நாயகத்தின் படுக்கை, ஹதீஸ் எண்: 314)

படுக்கையின் மென்மை அவர்களின் இறை வணக்கத்திற்குத் தடையாக இருக்க முடியாது என்றாலும், படுக்கை மென்மையாக உள்ளது; எனவே சிறிது நேரம் அதிகமாக உறங்கிவிடுவோமோ அல்லது இறை வணக்கத்திற்காக எழாமல் இருந்து விடுவோமோ மேலும் அதில் ஒரு மெத்தனமான உணர்வு வந்துவிடுமோ என்ற சிந்தனையைக் கூட அன்னாரால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

இதுவே அன்னாரின் மிக உயர்ந்த வாழ்க்கை தரமாக இருந்தது. **(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்....)**

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

*******

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறை நேசம் குறித்த மனம் கவர் கோணத்தில் நற்குறிப்புகள்**

இறை வணக்கம் இன்றி, இறைநேசம் இல்லை. இறைநேசம் இல்லாமல் உண்மையான இறை வணக்கம் சாத்தியமில்லை

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு இறைக் கட்டளைகளை வழங்கியபோது, அதன் உச்சத்தையும் தமது அமலகளால் செய்து காட்டினார்கள். பின்னர், இந்தத் தரத்தின் கீழ் உங்களை கொண்டு வருவதற்கு நீங்கள் முயலும்போதுதான் உண்மையான கட்டுப்படுதல் மற்றும் பின்பற்றுதல் என்பதோ முழுமை பெறும் என்று நமக்கு கவனமூட்டினார்கள். மேலும், நாம் அன்னாரின் முன்மாதிரி மற்றும் கட்டளைகளை எப்போதும் கருத்தில் கொண்டு அமல் செய்வதற்கு முயற்சி செய்யும்போதுதான் அன்னார் (ஸல்) தமது சமுதாயத்திற்காக செய்த அந்த துஆக்களும் நமக்கு பயன் தரும்

அல்லாஹ்வை வணங்குவதற்கான எந்தவொரு சந்தர்ப்பத்தையும் அன்னார் (ஸல்) கை நழுவ விட்டதில்லை

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 06 பிப்ரவரி 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **தப்லீஃக் மாதம் 06 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ ○ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ ○ الرَّحْمٰنِ الرَّحِيمِ ○

مٰلِكِ يَوْمِ الدِّينِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ○ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ○

صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ○

அல்லாஹ் நமக்குக் கூறியுள்ளது போன்று, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு அழகிய முன்மாதிரியாவார்கள். மேலும் ஒவ்வொரு விஷயத்திலும் அன்னார் (ஸல்) அழகிய முன்மாதிரி ஆவார்கள். கடந்த குத்பாக்களில், இது தொடர்பாக அன்னாரின் இறைநேசம் குறித்துப் எடுத்துரைக்கப்பட்டது. இறைநேசத்தின் குறிப்பில் அன்னாரின் இறை வணக்கத்தின் தரமும் எடுத்துரைக்கப்பட்டது. இறை நேசத்தின் குறிப்புகளுக்குப் பிறகு அடுத்த தலைப்பாக அன்னாருடைய இறை வணக்கத்தை எடுக்கலாம் என்பது எனது எண்ணமாக இருந்தது.

ஆனால், இறைநேசத்தைப் பற்றிக் கூறத் தொடங்கியபோது, இறை வணக்கங்களின் ஏராளமான நிகழ்வுகளும் அதில் வந்துவிட்டன. நான் விரும்பியபோதும் இந்த இரண்டு கருத்துகளையும் தனியாக பிரிக்க முடியவில்லை, ஏனென்றால் அவை ஒன்றை மற்றொன்று சார்ந்ததாகும். இறை வணக்கம் இன்றி, இறைநேசம் இல்லை. இறைநேசம் இல்லாமல் உண்மையான இறை வணக்கம் சாத்தியமில்லை.

எவ்வாறாயினும், இன்று நான் இறை வணக்கத்தைப் பற்றி கூடுதலாக எதனை எடுத்துரைக்க இருக்கின்றேனோ அவற்றை இறை வணக்கம் என்ற தலைப்பின் கீழ் எடுத்திருந்தாலும், முந்தைய குத்பாக்களில் எடுத்துரைக்கப்பட்டது போன்று அதன் உச்சம் இறைநேசத்தில் சென்றுதான் முடிவடைகிறது.

அல்லாஹ் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த இறை நேசத்தின் தரத்தை திருக்குர்ஆனில் எவ்வாறு எடுத்துரைத்துள்ளான் என்பதன் விளக்கத்தை நான் கடந்த குத்பாக்களில் ஒரு வசனத்தின் அடிப்படையில் குறிப்பிட்டிருந்தேன்.

அல்லாஹ் கூறுகிறான்:

قُلْ إِنَّ صَلَاتِي وَنُسُكِي وَمَحْيَايَ وَمَمَاتِي لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ

நீர் கூறுவீராக! எனது தொழுகையும், எனது வணக்கங்களும், எனது வாழ்வும், எனது மரணமும் அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே உரியன.

(அல்-அன்ஆம்: 163).

நான் கூறியது போன்று இந்த வசனத்தில் விளக்கமோ கடந்த குத்பாக்களில் எடுத்துரைக்கப்பட்டு விட்டது. எனவே மீண்டும் அதனை எடுத்துரைப்பதற்கு அவசியமில்லை.

அல்லாஹ் மீண்டும்,

فَاتَّبِعُونِي يُحْبِبْكُمُ اللّٰهُ

என்று அறிவிக்கும்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறி, நாமும் அந்தத் தரங்களை பெற வேண்டும் என்று நமக்கு வழிகாட்டியுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான்:

பொருள்: (நபியே!) நீர் மக்களிடம் கூறுவீராக: நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றினால் பின்னர் அல்லாஹ் உங்களை நேசிப்பான். மேலும் உங்களாலும் அல்லாஹ்வின் அன்பை பெற்றுக் கொள்ள முடியும். (ஆலி இம்ரான்: 32)

எனவே இந்த அறிவிப்பை செய்யுமாறு அல்லாஹ் அன்னாரிடம் கூறி, அதனை பெறுவதற்கு உண்மையான முயற்சியை மேற்கொள்ளுங்கள் என்று அல்லாஹ் அந்தத் தரங்களை பெறுவதற்கு நமக்கு வழிகாட்டல் வழங்கியுள்ளான். இறை வணக்கம் குறித்து திருக்குர்ஆனில் அல்லாஹ் அன்னாரின் மூலமாக நமக்கு எண்ணற்ற கட்டளைகளை வழங்கியுள்ளான். ஓரிடத்தில் அல்லாஹ் கூறுகிறான்:

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُونِ

பொருள்: ஜின்களையும், மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவேயன்றி நான் படைக்கவில்லை.

(அஸ்ஸாரியாத்: 57)

எனவே நீங்கள் என்னைப் பின்பற்ற விரும்பினால் பின்னர் கவனமாக கேளுங்கள்; நான் மனிதப் படைப்பின் நோக்கத்தின் புரிதலை பெற்றுக் கொண்டது போன்று நீங்களும் அதனை பெற்றுக் கொள்ளுங்கள்; மேலும் அதற்குரிய உரிமைகளை செலுத்த முயற்சி செய்யுங்கள். அப்போதுதான் உங்களது படைப்பின் நோக்கத்தை உங்களால் பெற முடியும். மேலும் அப்போதுதான் அல்லாஹ்வின் நேசத்தை பெற முடியும்.

அடுத்து, அல்லாஹ் இறை வணக்கத்தின் பக்கம் கவனமூட்டியவாறு மற்றோரிடத்தில் கூறுகிறான்:

يَا أَيُّهَا النَّاسُ اعْبُدُوا رَبَّكُمُ الَّذِي خَلَقَكُمْ وَالَّذِينَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُونَ

மக்களே! நீங்கள் இறையச்சத்தை பெறும் பொருட்டு, உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தவர்களையும் படைத்த உங்கள் இறைவனையே வணங்குங்கள்; (அல்-பகரா: 22).

எனவே அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கும், தக்வாவை அடைவதற்கும் இறை வணக்கம் செய்வதும், மேலும் அந்த இறை வணக்கத்தின் தரத்தை உயர்த்திக் கொண்டே செல்வதும் அவசியமாகும். அடுத்து, அல்லாஹ் கூறுகின்றான்:

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا ارْكَعُوا وَاسْجُدُوا وَاعْبُدُوا رَبَّكُمْ وَافْعَلُوا الْخَيْرَ لَعَلَّكُمْ تُفْلِحُونَ

பொருள்: நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் ருகூஉ செய்யுங்கள், ஸஜ்தா செய்யுங்கள், உங்கள் இறைவனை வணங்குங்கள், இன்னும் நன்மையைச் செய்யுங்கள்; நீங்கள் வெற்றியடைவீர்கள்.

(அல்-ஹஜ்: 78).

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு இந்தக் கட்டளைகளை வழங்கியபோது, அதன் உச்சத்தையும் தமது அமலகளால் செய்து காட்டினார்கள். பின்னர், நீங்கள் இந்தத் தரத்தின் கீழ் உங்களை கொண்டு வருவதற்கு முயலும்போதுதான், உண்மையான கட்டுப்படுதல் மற்றும் பின்பற்றுதல் என்பதோ முழுமை பெறும் என்று நமக்கு கவனமூட்டினார்கள். மேலும், நாம் அன்னாரின் முன்மாதிரி மற்றும் கட்டளைகளை எப்போதும் கருத்தில் கொண்டு அமல் செய்வதற்கு முயற்சி செய்யும்போதுதான் அன்னார் (ஸல்) தமது சமுதாயத்திற்காக செய்த அந்த துஆக்களும் நமக்கு பயன் தரும்.

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 19 MAR 2026 Issue No. 12

**ACT. MANAGER**
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

வெறும் பகட்டினாலும், உதட்டு அளவு பேச்சுகளால் மட்டுமோ அந்த துஆக்களிலிருந்து நாம் பயன் அடைந்து விட முடியாது.

எவ்வாறிருப்பினும், அன்னார் (ஸல்) இந்த முன்மாதிரிகளை நிலைநாட்டியுள்ளார்கள். அவற்றில் ஏராளமான உதாரணங்களை நான் சமர்ப்பித்து விட்டேன். வேறு சில முன்மாதிரிகள் உள்ளன. அவற்றை சமர்ப்பிக்கின்றேன்.

அன்னார் (ஸல்) அல்லாஹ்வை வணங்குவதற்கான எந்த ஒரு வாய்ப்பையும் நழுவ விடமாட்டார்கள். இன்னும் கூறப்போனால், தூங்கும்போதும் கூட அன்னார் (ஸல்) இறை வணக்கத்தில் இருந்தார்கள். இதனை அன்னார் (ஸல்) சுயமே கூறியுள்ளார்கள்: 'எனது கண்கள் உறங்குகின்றன, ஆனால் எனது உள்ளம் அல்லாஹ்வின் நினைவிலிருந்தும், இறை வணக்கத்திலிருந்தும் கவனமற்றதாக இருப்பதில்லை.' (ஸஹீஹ் புஹாரீ, ஹதீஸ் எண்: 3569).

அல்லாஹ்வை நீங்கள் எப்போதும் கவனத்தில் கொண்டிருக்க வேண்டும்; இது உங்களது தரமாக இருக்க வேண்டும் என்று அன்னார் (ஸல்) தம்மை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் இதற்கான அறிவுரையை வழங்கியுள்ளார்கள்.

தமது இறை வணக்கத்தின் விவகாரத்தில் எவ்வளவு நுட்பமாக அன்னார் (ஸல்) தம்மை பரிசோதித்து வந்தார்கள் என்பது தொடர்பாக ஓர் அறிவிப்பு உள்ளது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒருமுறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓவியம் வரையப்பட்ட ஒரு போர்வையில் தொழுதார்கள். அந்த சித்திரங்களின் மீது அன்னாரின் பார்வை பட்டது. தொழுது முடித்ததும் அன்னார் (ஸல்) கூறினார்கள்: 'இந்தப் போர்வையை அபூ ஜஹ்மிடம் கொண்டு செல்லுங்கள்; மேலும், அபூ ஜஹ்மிடமிருந்து சித்திரங்கள் இல்லாத சாதாரணப் போர்வையை வாங்கி வாருங்கள்; ஏனெனில், இது தற்போது எனது தொழுகையில் இருந்து எனது கவனத்தை மாற்றி விட்டது.

அதாவது, ஒரு மெல்லிய பார்வை கூட அதன் மீது பட்டதும், தாம் அந்த போர்வையின் பக்கம் பார்த்து, தமது பார்வை அல்லாஹ்விடமிருந்து விலகி விடுவதை அன்னாரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் தொழுகையில் இருந்தபோது அதன் (துணியின்) சித்திர வேலைப்பாடுகளை நான் பார்த்துக் கொண்டிருந்தேன், அப்போது, அது என்னைச் சோதனைக்குள்ளாக்கி (கவனத்தை சிதைத்து) விடுமோ என்று நான் அஞ்சினேன்.' (ஸஹீஹ் புஹாரீ, ஹதீஸ்: 373)

இதற்கான விளக்கத்தில் ஸய்யிது ஜைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் ஸாஹிப் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

அதாவது, இந்த பாடத்தின் சாரம்சம் என்னவென்றால், ஆடைகள் எளிமையாக இருக்க வேண்டும். அவற்றில் கவனத்தைச் சிதறடிக்கும் அளவுக்குப் பளபளப்பு இருக்கக்கூடாது.

அறிவுப்பூர்வமாக முதிர்ச்சியடைந்தவர்கள் இயல்பாகவே எளிமையின் பக்கமே ஈர்க்கப்படுவார்கள். எழுதுகின்றார்கள்: இக்காலத்திலும் கூட நாம் பார்க்கின்றோம்: நற்பண்புள்ள மக்கள் ஆடைத் தேர்வில் எளிமையான வண்ணங்களையே விரும்புகின்றார்கள். ஆனால், சிலர் இன்றைய நாட்களிலும் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றனர் என்றால், அவர்கள் எப்போதும் தங்கள் ஆடைகளைப் பார்ப்பதிலும், அவற்றின் இஸ்திரியைச் சரி செய்வதிலுமே கவனம் செலுத்துகிறார்கள். தொழுகையில் முழு கவனமும் அல்லாஹ்வின் பக்கமே இருக்க வேண்டுமே தவிர, எந்த ஆடையின் பக்கமும் இருக்கக் கூடாது.

அன்னார் மேலும் எழுதுகின்றார்கள்:

தொழுகையில் முழுமையான ஒருமுகப்படுதல் அவசியமாகும்.

அதாவது, ஒரு மனிதன் தொழுகையில் முழுமையாக மூழ்கிவிட வேண்டும். அப்போதுதான் தொழுகையானது உண்மையான தொழுகையாக இருக்க முடியும். அதில் மனிதன் முழுமையாக மூழ்கிவிட வேண்டும். முழுமையாக தொழுகையில் மூழ்கி இருக்க வேண்டும்.

எனவேதான் இஸ்லாத்தின் அடையாளங்கள் தொழுகையாளியின் சூழலில் அவரது கவனத்தை தன் பக்கம் ஈர்க்கும் எந்தவொரு பொருளும் இருப்பதை விரும்புவதில்லை. இதிலிருந்து, நபி பெருமானார் (ஸல்) அவர்கள் எவ்வளவு கவனத்துடன் அல்லாஹ்வை வணங்க விரும்பியிருந்தார்கள் என்பது தெரிய வருகிறது. ஒரு மெல்லிய பார்வை கூட இறை வணக்கத்தின் போது அல்லாஹ்விடமிருந்து கவனத்தை திசைதிருப்பக் கூடிய ஒரு பொருளின் மீது பட்டு விடக் கூடாது என்பதில் அன்னார் (ஸல்) மிகவும் கவனமாக இருந்தார்கள்.

இது குறித்து பல்வேறு ஹதீஸ்களில் குறிப்பிடப்பட்டுள்ளது:

தொழுகையாளிக்கு முன் உருவப்படங்கள் இருக்கக்கூடாது; முன்னால் உருவப் படங்களைக் கொண்ட ஆடைகள் இருக்கக் கூடாது; மேலும் உருவப் படங்களைக் கொண்ட திரைச் சீலைகள் இருக்கக் கூடாது. ஏனெனில் இவை அனைத்தும் தொழுகையில் கவனத்தை சிதைக்கும் காரணிகளாக அமையக் கூடும். எனவேதான் அவற்றிலிருந்து தடுக்கப்பட்டுள்ளது.

தொழும் போது, முன்னால் எவற்றின் பக்கம் பார்ப்பதால் கவனம் சிதைந்து விடுமோ அத்தகைய திரைகள் அல்லது சித்திரங்கள் முன்னால் இருக்கக்கூடாது. அத்தகைய பொருட்கள் கிப்லாவின் திசையிலும் இருக்கக்கூடாது.

(ஸஹீஹ் புஹாரீ, மொழிபெயர்ப்பு (உருது) பாகம் 1, பக்கம் 479 - நஸாரத் இஷாஅத்)

அதேபோன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்ந்த வாழ்க்கை முறையைப் பற்றி மற்றுமொரு குறிப்பு கிடைக்கின்றது.

ஹஸ்ரத் ஜாஃபர் பின் முஹம்மது (ரலி) அவர்கள் தமது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இல்லத்தில் படுக்கை எப்படி இருந்தது? என்று கேட்கப்பட்டது. அதற்கு அன்னார் (ரலி), 'அது பேரீச்ச நாரினால்

இதன் தொடர்ச்சி 10-ம் பக்கம்....

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad